Registered as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 19 (04 - 09 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை 199

## தேவை 400 றீம் கடதாசி; அனுமதி ஐந்து கிலோ

யாழ் பல்கலைக்கழகத்துக்கு மாதாந்தம் சுமார் ஐந்து கிலோ கிராம் காகிதாதிகள் மட்டுமே அனுப்பி வைக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது இப்பல்கலைக் கழகத்தின் முழுமையான செயற்பாட்டுக்கு மாதாந்தம் சுமார் நானூறு றீம் காகிதாதிகள் தேவை ஆனால் சிறிலங்கா கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் தடை உத்தரவு காரணமாக ஐந்து ''றீம்'' காகிதாதிகள் (பேப்பர்) மட்டுமே கடந்த பல மாதங்களாக (8-ம் பக். பார்க்க)

# அரச நிவாரணம் அரைவாசி வெட்டு

# 5 லட்சம் தமிழ் மக்கள் பாதிப்பு

## நிதி நெருக்கடி என்கிறது அரசு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணப் பொருள்களின் அளவு அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் இப்பகுதிகளில் அகதிகளாக வாழும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நேரடியாகப் பாதிப்படைந்துள்ளனர்.

அகதிகள் நிவாரணத்துக்கு என ஒதுக்கப்பட்ட நிதி பற்றாக்குறையாக உள்ளதனாலேயே இந்நடவடிக்கைமேற்கொள்ளப்படுவதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி டீ. சில்வா தெரிவித்தார்.

சுமார் ஐந்து லட்சம் அகதிகளைப் பராமரிக்க 1992 ஆம் ஆண்டில் சிறிலங்கா ரூபா மதிப்பில் 260 கோடி ரூபா தேவைப்பட்டிருந்த போதிலும், அரசு நிவாரணப் பணிக்குச் சுமார் 100 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கியுள்ளது இதனால் நிவாரண உதவியைப் பாரிய அளவில் குறைக்க வேண்டியதாகவுள்ளது என அகதிகள் புனர்வாழ்வு அதிகாரி கிறிஸ்ரி டீ சில்வா கூறியிருக்கிறார்.

இதுவரை ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு வாரத்தில் 315 ரூபா வழங் [8 ஆம் பக்கம் பார்க்க]

## சமையல் பாத்திரமின்றி 1000 குடும்பங்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் அமைந்துள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள சுமார் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் சமையல் பாத்திரங்கள் இன்றி பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி அகதிகளுக்கு சமையல் பாத்திரங்களை வாங்கிக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக யாழ் செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை இளவாலை, மாதகல், அளவெட்டிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கி இருக்கும் சுமார் 15 ஆயிரம் குடும்பங்களுக்கு ஒருவார உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்; சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் புதிதாக அமைக்கப்பட்ட 14 முகாம்களில் தங்கியுள்ளவர்களிற்கு மேலும் ஒரு வாரத்திற்கு உலர் உணவு வழங்கப்பட உள்ளதாகத் தெரியவந்துள்ளது (42), (பா)

## ஆவணங்களை மீட்டெடுக்க கூட்டுப்படை தடை

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் சிக்கியுள்ள அரச அலுவலக ஆவணங்களை மீட்டெடுப்பதற்கு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

காப்புறுதிக்கூட்டுத்தாபனம் உட்பட மேலும் சில அரசஅலுவலகங்களின் ஆவணங்கள் மேற்படி பகுதிகள் சிக்கியுள்ளன. இவற்றை மீட்பதற்கு அரசாங்க அதிபரினூடாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனளிக்கவில்லை என்று தெரியவருகிறது. (பா)

## அரச சார்பற்ற நிறுவனங்களால் அரசின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

நிவாரணம்வழங்க நிதியுதவி செய்யுமாறு அரசசார்பற்ற நிறுவனங்களிடம் அரசாங்கம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப் பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பத்திரிகையாளரிடம் பேசிய சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி டீ. சில்வா நிவாரணம் வழங்க உதவுமாறு அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால், இவ்அரசசார்பற்ற நிறுவனங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் கோரிக்கையை நிராகரித்து விட்டதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

## பாடுபட்டு தேடிய சொத்துக்கள் இராணுவத்தால் சூறை

### தப்பி வந்தவர்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

''நீண்ட காலம் கஷ்டப்பட்டுத் தேடிய சொத்துக்கள் இராணுவத்தினரால் சூறையாடப்படுகிறது. காலம் காலமாக வாழ்ந்துவந்த எங்கள் ஊர் சுடுகாடாகமாறிக்கொண்டிருக்கிறது.''

இவ்வாறு சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள மாதகலில் இருந்து தப்பிவந்த வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வரை மாதகலில் இராணுவத்தின் பிடியில் சிக்கியிருந்த ஐந்து வயோதிபர்கள் தப்பி வந்துள்ளனர்.

இவர்களின் தகவலின் படி, மாதகலில் உள்ள பெரும்பாலான வீடுகளிலுள்ள பல பெறுமதிவாய்ந்த பொருள்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டு வருகிறது. விபுலானந்தர் வீதி, நாவலர் வீதி, அந்தோனியார் வீதி, தபால்கந்தோர் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள பல வீடுகள் உடைக்கப்பட்டிருக்கிறது. வேலிகள் தீயிட்டு எரிக்கப்பட்டிருககிறது. வீடுகளில் இருந்த பல பொருள்கள் வீதிகளில் வீசியெறியப்பட்டிருக்கிறது. காஞ்சிபுரம் சேலைகளை நிலத்தில் விரித்து படையினர் படுத்துறங்குகின்றனர். இவ்வாறாக பொது மககளின் பல சொத்துக்கள் தினமதினம் அழிக்கப்படுகின்றன.

பார்வதி (வயது 70), சோமு (8 ஆம் பக்கம பார்க்க)

## நிவாரணத்தை குறைக்க அரச அதிபர் ஆலோசனை?

(கொழும்பு)

யாழ் குடாநாட்டிற்கான நிவாரணப் பொருள்களைக் குறைக்குமாறு யாழ் அரசஅதிபர் அரசாங்கத்தைக் கோரியதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசியபுனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி டீ சில்வா, யாழ் குடாநாட்டில் உபஉணவுப்பொருள்களின் உற்பத்தி விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் நிவாரணப் பொருள்கள் விநியோகத்தைக் [8 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு

### வீரவேங்கை சத்தியராஜ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சந்தனமடு ஆறு எனும் இடத்திற்கு இயக்க [8 ஆம் பக்கம் பார்க்க]

## வாணிபம், தொழில் முயற்சிகளை பதிவு செய்ய வேண்டுகோள்

(நமது நிருபர்)

தமிழீழத்தின் வடபகுதியில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் தமது வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித் துறையில் பதிவு செய்து சான்றிதழ் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிடபொறுப்பாளர் செ. தமிழேந்தி கேட்டுள்ளார்.

பதிவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லையுள் பதிவு செய்யாத எந்த ஒரு வாணிபமும், தொழில் முயற்சியும் தொடர்ந்து இயங்க இசைவளிக்கப்படாது என்பதை கருத்திற்கொள்ளுமாறும்,

பதிவு செய்யும் செயல்முறை முதலில் யாழ் குடாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக இடம் பெறும் என்றும்

விண்ணப்பப் படிவங்களை நூறு ரூபாய் பதிவுக் கட்டணம் செலுத்தி யாழ் மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்

பவுண், பொன், வெள்ளி நகை வாணிபம், அடகு கடை, நகை உற்பத்தித் தொழில், பலசரக்குவாணிபம், புடைவை வாணிபம், கட்டடப் பொருள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசிற்கு பெரும் நிதி நெருக்கடி

ஒன்பது வருடங்களாக தொடர்ந்து நடந்து வரும் போரினால் சிறிலங்கா அரசிற்கு பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக பி பி ஸி. தெரிவித்தது.

அதிகரித்து வரும் அகதிகளை பராமரிப்பதற்கும் தொடர்ந்துயுத்தத்தைநடாத்துவதற்கும் பெருமளவு நிதி தேவைப்படுகிறது.

இதனால் பாதுகாப்பு வரியை மூன்று மடங்காகஅரசு அதிகரித்தது பெற்றோலியப் பொருள்களின் விலையைபத்து சதவீதத்தால் அதிகரித்தது இதன்மூலம் பெறப்பட்ட [8 ஆம் பக்கம் பார்க்க]

**நீரைத் தேக்கி நிலவளம் காப்போம்**

# வரி விளம்பரம்


**ENGLISH ASSISTANT TEACHERS**

போட்டிப் பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 05-09-92 10-30மணி Letures byMr.K.Sabanayagam குறைந்த கட்டணம் School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. (சி/4990)

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி மொத்த மாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: 698/15 தலையாழி (வயிரவர் கோவிலடி) சபாபதி வீதி, யாழ்ப்பாணம். (3116)

## your watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி-4970)

## புதிய மீரா நாவல்

பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்து மகிழும் நாவல்கள். நீங்களும். படித்துப் பாருங்கள். இதுவரை வெளிவந்த இருபத்தியொரு ''மீரா'' நாவல்களில் எட்டு நாவல்கள் மட்டுமே விற்பனைக்குண்டு. பூபாலசிங்கம், மக்மிலன், மண்டேலா புத்தக சாலைகள் யாழ்ப்பாணம். (3123)

## தேவை

வேப்பம் விதை தேவை அண்ணா கோப்பி கடைகளிலும் கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்ளலாம் மில்க்வைற்-யாழ்ப்பாணம். (சி-4978)

## தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும் உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி, (3037)

## இன்று வியாழ மாற்றம்

இன்று வாக்கியப்படியும், 11ஆம் திகதி திருக்கணிதப் படியும் வியாழன் கன்னிராசிக்கு மாற்றமடைகின்றது. வியாழமாற்றம், பகவான் ஸ்ரீ நீலகண்ட பாபா தெய்வீக வரலாறு, ரூ. 8/50எங்கும் கிடைக்கும். (நூலாசிரியர் Prof. சத்தியதாஸன்) சோபிதா, யாழ்ப்பாணம். (3126)

## வாங்கப்படும்

கோழித்தீன் வெற்றுப்பைக்கற் நல்ல விலையில் வாங்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-4997)

## தவறிவிட்டது

பிறவுண்நிற கைப்பை(Hand bag) ஒன்று முக்கிய ஆவணங்களுடன் யாழ். பல்கலைக் கழகத்திற்கும் யாழ்ப்பாண பஸ் நிலையத்திற்கும் இடையில் (பலாலி வீதி) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்துஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3127)

வருமுன் காப்போம்,
உடலுறுதி உண்டானால், உள்ளத்துறுதி தானே வளரும் உடலுறுதி உண்டாக ஒரே வழி - தினமும்யோகாசனப் பயிற்சியே.
உங்கள் அபிமான மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் இருபத்தைந்து மட்டுமே மில்க்வைற் தொழிலகத்தில் சேர்ப்பித்து, யோகக்கலை நூலும், யோகாசன விளக்கப்படங்களும் அன்பளிப்பாகப் பெற்று, சுக வாழ்வு வாழுங்கள்.
மில்க்வைற் நீல சோப் கட்டி ஒன்று ரூ. 7/- மட்டுமே.
எல்லாக்கடைகளிலும் விற்பனையாகின்றது (சி-4979)


## 1ம்-ஆண்டுநினைவஞ்சலியும் திவச அழைப்பிதழும்



யாழ்/ இந்துக்கல்லூரி [A/L91] உயர்தர வகுப்பு மாணவனும் மணலாறு மண்களத்திலே மாவீரனான

### லெப். டொமினிக்மாஸ்டர்

[நடேசன் குமரேசன்]

தீபமாய் மலர்ந்தது 02. 04. 1972 — தியாகியாய் மறைந்தது 16. 09. 1991

எமது மண்ணில் சுதந்திரமாக நடமாட கல்விகற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் நான் எனது பாதையை மாற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன். என் போன்ற மாணவர்களின் கல்வியை தொடரவும், எமது மண்ணை மீட்கவும் என்னால் ஆனதைச் செய்யச் செல்கிறேன். தயவுசெய்து எனது இப்பாதையில் தடையாக இருக்காதீர்கள். சென்று வருகிறேன். வணக்கம்:

உங்கள்,
அன்பும் பணிவுமுள்ள மகன்
ந. குமரேசன்.

மகனே, உயர்ந்த இலட்சியத்திற்காக உன்னுடைய கல்வி, இளமை, ஆற்றல், அழகு, வீரம் யாவற்றையும் ஆகுதியாக்கிக் கொண்டாய். குறைந்த காலத்தில் கூடிய தியாகம் செய்து களைப்புற்று விட்டாயோ? அதனால் தான் மண்மாதா உன்னை தன்மடியில் தாலாட்டினாளோ? நீ மாவீரன் ஆகிவிட்டாயோ? உமக்கும் உம்முடன் சேர்ந்த மாவீரர்களையும் இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

இன்று[04- 9- 92] வெள்ளிக்கிழமை இவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆண்டுத்திவச நிகழ்வில் இயக்க உறுப்பினர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

டொமினிக் வீதி, நீர்வேலி வடக்கு. — பெற்றோர், சகோதரர்கள். (3110)

## 1-ம் ஆண்டு நினைவு அலை

வீரஜனனம் 03 — 05 — 1974



வீரச்சாவு 16 — 09 — 1991

### வீரவேங்கை மோகன்

[சிவகுமார் - சுதன் (கிருஸ்ணா)]

திதி: 4-9-1992

இளவயதில் இன்பத்தை இறுதிவரை ஏற்காமல்
பாசத்தை மறந்து பாசறைக்கு போனாயே
போராடப் புறப்பட்ட கிருஸ்ணா
மண்மீட்பின் வேளையிலே செங்குருதி தானிழந்து
இம் மண்ணை சிவப்பாக்கி மாவீரன் வரிசையிலே
சேர்ந்து விட்டாய் சூரன் கல்லில்
போராட்ட வேளையிலே தமிழீழதேச
மக்கள் எல்லாம் எம்பணியை ஆற்றிடப் புறப்படுவோம்
பாசறைக்கு

குமாரதாஸ் வீதி, கண்டாவளை. [3115] — குடும்பத்தினர் உறவினர், நண்பர்கள்

## நினைவு கூருகின்றோம்... 1992 - 09 - 04

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா தவசிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு மன்னார் கோட்டை சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய .

**2 ம் லெப் காளி** (சந்தியாப்பிள்ளை ஜெராட் ஜோண்சன் - கங்காணித்தீவு, மன்னார்)

1987 ஆம் ஆண்டு வவுனியா - குருமண்காட்டுச் சந்தியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். கண்ணன்** [சே. சிறிசேதுகாவலர் -குருமண்காடு, வவுனியா]

**கப்டன் தனம்** [நாகமணி வசந்தராசன் - தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு]

வவுனியா - பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். கைலை** [கோபாலசிங்கம் வன்னியசிங்கம் - கொந்தக்காரன்குளம், வவுனியா]

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பலாலிப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -
பலாலி பிரதேசப் பொறுப்பாளர்

**பேரின்பம்** [குருசுமுத்து மைக்கல்பிள்ளை- காங்கேசன்துறை வீதி, பலாலி - யாழ்ப்பாணம்]

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போன 3 தமிழ் இளைஞர்கள்.

1989 ஆம் ஆண்டு யாழ். சுண்டிக்குளிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**முரளி** [இராசநாயகம் பிரேமதாஸ் - இணுவில் தெற்கு யாழ்ப்பாணம்]

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வாகரைப் பகுதியில் சுகவீனம் காரணமாக எம்மைப் பிரிந்த -

**முகிலன்** [சொறிவில் - 12, கல்முனை, அம்பாறை]

வவுனியா - பாவற்குளம், முதலாம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சுஜிப் / சிறி** [கணபதிப்பிள்ளை சிறிரஞ்சித் - பம்பைமடு, வவுனியா]

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் தனது கடையைத் திறக்க முனைந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் வைத்து விட்டுச் சென்ற கண்ணிவெடி வெடித்ததில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1991 ஆம் ஆண்டு வவுனியா - கூழாங்குளம் பகுதியிலுள்ள தமது வீட்டினைத் துப்பரவு செய்யச் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4991)



## A/L 93, 94 புதிய பிரிவுகள்

### ஆரம்பம்: 5-9-92 (சனி)

| நேரம் | பாடம் | ஆசிரியர் | அலகு |
| --- | --- | --- | --- |
| சனி/ஞாயிறு | | | |
| 7.45 - 9.00 | பௌதிகவியல் | திரு. வர்ணம் | ஒளியியல் |
| 10.45 - 11.45 | பௌதிகவியல் | திரு. பத்மநாதன் | பொறியியல் |
| 1.15 - 2.15 | விலங்கியல் | திரு நாகநாதன் | வன்கூட்டுத்தொகுதி |
| 2.15 - 3.15 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | தாவரப்பாகுபாட்டியல் |
| 3.15 - 4.15 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | நுண்ணுயிரியல் |
| 4.15 - 5.00 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | வினா-விடை வகுப்பு |
| 5.00 - 5.45 | இரசாயனவியல் | திரு. செல்வா | பொது இரசாயனம் |
| 5.45 - 6.30 | விலங்கியல் | திரு. நாகநாதன் | உணவுக்கால்வாய்த் தொகுதி |

## யூனிவேர்சல்

(சி-4988) கந்தர்மடம் - யாழ்ப்பாணம்




கற்பூரப் புல்வெளி

முள்ளியவளையை அண்டியுள்ள காட்டுத்துண்டு அங்குதான் வெள்ளைப்படைகள் முகாமிட்டிருந்தார்கள். எங்கோ தொலை தூரத்திலிருந்து படையெடுத்து வந்து தமிழ் நிலத்தை முழுமையாக ஆக்கிரமிக்க அவர்கள் அங்கே வந்திருந்தார்கள்.

அந்த இரவு முழுநிலவு நடுவானில் நின்று பொழிந்து கொண்டிருந்தது மாவீரன் பண்டாரவன்னியன் தலைமையில் தமிழர் படை அணிவகுத்து நின்றது.

வெற்றி அல்லது வீரமரணம் !!

தமிழர் படை கற்பூரப் புல்வெளிச்குள் அன்று புயலாக இறங்கியது வெள்ளையர்கள் சிதறி ஓடினர் முடிவாக ஒருவர் மிச்சமில்லாமல் அழிந்து போயினர்

தமிழ் நிலம் வீரம் செறிந்தது தான் ஏனெனில் தமிழர்கள் இலகுவாக அடிமையாகப் போகவில்லை பெரும் படைக்கும் ஆயுதங்களுக்கும்எதிராக அவர்கள் போராடினார்கள் பண்டாரவன்னியனும் அப்படித்தான். தான் அழிந்துபோகும் அந்த வேளை வரை இந்த மண்ணின் வாழ்விற்காக போராடினான் இறுதியில் மண்ணுக்காகவே தன்னைத் தந்தான்.

பண்டாரவன்னியனைஅவன் வாழ்ந்த மண்ணின் மக்கள் மறக்கவே இல்லை அவர்கள் மறக்கப்போவதும் இல்லை. இன்றும் அவனை நினைத்து சில இரவுகளில் அவன் வரலாற்றை பாடுகிறார்கள்அவர்களுக்கே உரிய கலைவடிவமாக அந்த மாவீரனின் வரலாறு ''பண்டாரவன்னியன்'' கூத்தாக ஆடப்படுகிறது.

வன்னியனின் வீரமரபு அழியாமல் அந்த மண்ணில் பாதுகாக்கப்படுகிறது.

பண்டாரவன்னியன் நடந்து திரிந்த அந்த நிலமும் ஒளித்து வாழ்ந்த அந்த காடுகளும் அவன் களங்களைச்சந்தித்த இடங்களும் இலகுவில் வீரத்தை இழந்திடுமா!

அன்னியர்களிடம் இழந்து போன சுதந்திரத்தையும் இறைமையையும் புனிதப் போரில் தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழினம் குதித்தபொழுது வன்னி பண்ணும் தன் வீரஞ்செறிந்த புதல்வர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பி வைத்தது.

வன்னியர்களின் வீரம் மீண்டும் புதுப் பிறப்பெடுத்தது. மேஜர் பசீலன், லெப். கேணல் போர்க்... எனச் சரித்திரம் படைத்தவர்கள் மாவீரர்கள்

வன்னி மண் தன் வீரப்புதல்வர்களை நினைத்து பெருமை கொண்டது. மகிழ்ச்சிக் கூத்தாடியது.

பரணி பிறந்தது அந்த வீரம் நிறைந்த மண்ணில்! அவன் ஓடியதும் ஆடியதும் அதே அந்த கற்பூரப் புல்வெளியும், அதன் அயலும். அதனால், அவனுக்குள் வீரம் பிறப்பெடுத்ததில் வியப்பெதுவும் இல்லையே?

முல்லை மண்ணினர் எப்போதும் வீரத்தைப் போற்றினார்கள். குழந்தைப் பருவம் தொட்டே மனதினுள் வீரத்தை விதைத்தார்கள்- வழிபாட்டில் கூட பாருங்கள்.

எந்த நேரமும் சாந்தமாக இருக்கும் கடவுளர்களை அவர்கள் வணங்குவதில்லை, கோபம் நிறைந்த வீரத் தெய்வமான கண்ணகியையே வணங்குகிறார்கள்-

கலை வடிவங்களில் கூட வீரம் இழையோடும். காத்தான் என்றும் கண்ணகி என்றும் வீரம் நிறைந்த கதைகளைத்தான் அவர்கள் கூத்தாக ஆடினர். பாட்டாக பாடினர் அதனால்தான் போலும் முல்லைமண் இந்த நாட்டின் சுதந்திர வாழ்விறகாக பல மாவீரர்களை தந்துள்ளது-

பரணி புலிகளுடன் தன்னை இணைத்துக்கொள்ளும்காலத்தில் அவனுக்கு வயது பதினெட்டு. ஆனால் உயர்ந்து வளர்ந்த அவன் தோற்றம் வயதை மீறியே இருந்தது. கறுப்புத் தன்மையை இழந்து சாதுவான செந்நிறம் விழுந்து போன தலைமயிர் அவன் முகத்திற்கு வித்தியாசமான தோர் அழகைக் கொடுத்தது.

1990இல் சிங்களப்படையினர் நாடு முழுவதிலும் தமது வெறியாட்டத்தை கட்டவிழ்த்து விட்டிருந்த பொழுது அவனொரு புலிவீரனானான்.

பயிற்சி முகாமில் திறமையாகப் பயிற்சிகளைச் செய்தும் குறிதவறாது சுடும் அவனது திறமையும் அவனோர் சிறந்த போராளியாக வருவான் என்பதை அடையாளம்காட்டியது

அவனது முதலாவது களம் இப்படித்தான் இருந்தது. நெடுங்கேணியில் இருக்கும்


பரணி

ஓர் பழம்தமிழ்க் கிராமத்தை ஆக்கிரமிக்க சிங்களப் படைகள் பெருமெடுப்பில் வந்து கொண்டிருந்தார்கள்

புலிகள் அவர்களின் வரவை எதிர்பார்த்து நின்றார்கள். சண்டை தொடங்கியது

பரணிக்கு அது முதற்களம். ஆனாலும் அவனுக்குள் பதற்றமும், பயமும் தோன்றவில்லை. சில மணித்துளிகள் கடந்தன. முன்னேறிய புலிகளுடன் ஒருவனாகபரணியும்... மறைவாக விழுந்த இராணுவத்தினனை நோக்கி ஓடிச் சென்றான்.

முதலாவது களத்திலேயே அவன் எதிரியின் ஆயுதத்தையும் கைப்பற்றிக் கொண்டான்.

மகிழ்ச்சி...... அவனுக்குள் பெருமை. இதைக் கேள்விப்பட்டதும் ஊருக்குள்ளும் எல்லோர் மனதிலும் பெருமை. அவர்கள் பண்டாரவன்னியனை நினைத்துக் கொண்டார்கள். அப்படியே பசீலனையும் நினைத்தார்கள். மனதுகள் மகிழ்ச்சியில் நிறைந்தன.

போராட்டம் தொடர்ந்தது. பரணியும் பல சண்டைகளங்களைச் சந்தித்தான்.

முல்லைத்தீவு இராணுவ முகாம் முற்றுகையில் ஈடுபட்டிருந்த புலிவீரர்களின் பின்புறமாக கடல் வழியாகத் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருடன் எழுந்த மோதல்களிலும் பரணி தீரமுடன் சண்டையிட்டான்.

அதன் பின்பு,

மாங்குளம் படைமுகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின்போதும் பரணி ஒரு புலிவீரனாக அதில் பங்கு கொண்டான்.

அந்தப் பெரும் சமரில் புலிவீரர்கள் மாங்குளம் படைமுகாமைக் கைப்பற்றினார்கள். முடிவாக,

வேவு பார்க்கும் குழுவில் ஒருவனாக பரணி நியமிக்கப்பட்டான்.

07-07-1992 இரவு தற்செயலான சம்பவம் ஒன்றில் பரணியை இந்த மண் இழந்தது. ஆனாலும் குறுகிய அவன் வாழ்வின் சாதனைகளுக்காக அவனை நினைத்து அவனைப் பெற்றெடுத்த வன்னி மண் பெருமை கொள்கிறது.

# இலக்கை மட்டும் தாக்கும் மருந்துகள்

மருத்துவ உலகம் தற்போது அளப்பரிய சாதனைகளை நிகழ்த்தி வருகிறது. அச்சாதனைகளில் ஒன்றுதான் உடலின் குறிப்பிட்ட ஒரு இலக்கை மட்டும் தாக்கும் மருந்துகளின் கண்டுபிடிப்புக்கள் ஆகும்.

தற்போது பாவனையிலுள்ள மருந்துகள் இரத்தத்தில் கலந்து இதயத்தின் துணையோடு உடலின் அனைத்து பகுதிகளுக்கும் பரவுகின்றன. இந்நிலையில் நோயால் பாதிக்கப்பட்ட கலம், பாதிக்கப்படாத கலம் என்ற வேறுபாடு இல்லாமல் செயல்பட்டு பக்க விளைவுகளையும் விஷத்தன்மைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன.

உதாரணமாக மூட்டுவலிக்காகப் பாவிக்கப்படும் 'ஆஸ்பிரின்' மற்றும் பினைல் பியூட்டோசன்' மருந்துகளானது மூட்டுவலியை நீக்குவதுடன் இரைப்பையில் அமிலத் தன்மையை அதிகப்படுத்தி உடம்பிற்கு கேடு விளைவிக்கின்றன.

பக்கவிளைவுகளை ஏற்படுத்தாத நோய் பாதிக்கப்பட்ட செல்களை மட்டும் தாக்கும் புதிய மருந்துகளைத் தயாரிப்பதில் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

இரத்த அழுத்தத்திற்கான புதிய வகை மருந்து''மெடோபுரோலால்'' மற்றும் கெப்டோபிரில் ஆகியவை நுரையீரல்களுக்குள் சென்றாலும் ஆஸ்துமா போன்ற பக்கவிளைவு எதையும் தோற்றுவிப்பதில்லை.

முன்பு உபயோகிக்கப்பட்ட மருந்துகள் இரத்த அழுத்தத்தை மட்டும் கட்டுப்படுத்தாமல் ஆஸ்மா போன்ற பக்க விளைவுகளையும், வயிற்றுப் போக்கையும், மயக்கத்தையும் ஏற்படுத்தி வலுவற்றவராக்கிவிடும்.

ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மருந்தொன்று பாதிக்கப்பட்ட உறுப்பை மட்டும் தாக்கிக் குணப்படுத்தும்.

இம்மருந்தைக் குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு சேர்க்க மோனோ-குளோனால் ஆண்டிபாடிஸ், லைபோசோப்ஸ், ஆல்புமின் மற்றும் பாலிமர் போன்ற கொண்டு செல்லும் தாங்கிகளை பயன்படுத்துகின்றனர் தாங்கிகளை உருவாக்கும் விதம்.

ஒரு அன்னியப்பொருளுக்கு எதிராக உடம்பு உருவாக்கும் ஆற்றலை ''ஆண்டிபாடி'' எனப்படுகிறது ஒரு சாதாரண விலங்கின் உடம்பினுள் நோய்க்கிருமியைச் செலுத்தும் போது விலங்கின் நோய் எதிர்ப்பு அமைப்பானதுஅந்நோய்க் கிருமியை அந்நியப் பொருளாக கருதி மண்ணீரலைத் தூண்டி அக்கிருமிக்கு எதிரான ஆண்டிபாடியை உருவாக்குகின்றன

முதலில் அவ்விலங்கின் மண்ணீரலை தனியே அப்புறப்படுத்தி, அதில் உள்ள ஆண்டிப் பாடியை உருவாக்கும் 'செல்' களைப்பிரிப்பர். இச் செல்லை ''மைலோமா'' என்னும் செல்லுடன் இணைத்து ''ஹைபிரிடோமா'' எனும் புதிய கலப்பு செல்லை உருவாக்குகின்றன.

ஒவ்வொரு ஹைபிரிடோமா செல்லும்மோனாகுளோனால் ஆண்டி பாடியை உற்பத்தி செய்கின்றது.

இந்த ஆண்டிபாடியேபுதிய இலக்கிட்டுத் தாக்கும் மருந்துக்கான தாங்கி ஆகும்.

பற்றுநோய் மருந்துடன் இந்த ஆண்டிபாடி இணைக்கப்பட்டு உருவாகும் கூட்டானது புற்றுநோயை அழிக்கும் சக்தி கொண்டது, ஆண்டி பாடி புற்றுநோய் மருந்துச் சேர்க்கையை கட்டிகள் கொண்ட எலியின் உடம்பினுள் செலுத்தியபோது. இம் மருந்து கட்டிகளில்ஐக்கியமாகி நீண்டகாலமாக இருந்து புற்று நோய் செல்களை தேர்ந்தெடுத்து அழித்தன.

வீரியமற்ற மருந்துகளைப் பாவிக்கும்போதுநோய்க்கிருமியானது மருந்துகளுக்கு ஏற்ப தன்னையே மாற்றிக் கொள்ளும் தன்மை உடையன. மேலும் இவற்றை அழிக்க அதிகமானமருந்துகள்தேவைப்படும். இதனால் பயங்கரப் பக்க விளைவுகளும் நஞ்சுத் தன்மையும் ஏற்படுகின்றன.

மருந்து லைபோசோம் கூட்டைப் பயன்படுத்தும் போது நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாக தாக்கிவிடுவதால் குறைந்த அளவு மருந்தே தேவைப்படுவதால் பக்க விளைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

நோய் பாதிக்கப்பட்ட செல்களை மட்டும் இலக்கிட்டும் தாக்கும் புதிய வகையில் மற்றொரு முறை மருந்தை 'பாலிமரால்' சுற்றி அனுப்புவதாகும் இவ்வாறு சுற்றி சிகிச்சையின் உதவியோடு பொருத்தி விடுவர். மெதுவாக மருந்து இரத்தத்தின் மூலம் உடம்பு முழுவதும் பரவுகிறது இம்முறையினால் புற்று நோயாளர் நரம்பு வழியாக மருந்தைச் செலுத்தும் நிலை மாற்றப்படுகிறது.

நீரழிவு நோயாளிக்கு குப்பிகளில் இன்சுலினை அடைத்து தோலின அடிப்பகுதியில் பொருத்துகின்றனர். இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு உயரும் போது தோலின் ஊடுருவும் தன்மையும் அதிகமாகி இன்சுலின் வெளிப்படும். எனினும் மருந்தை சரியான அளவுகளில் தயாரிக்கா விட்டால் ஒரே வேளையில் அனைத்து மருந்தும் வெளிப்பட்டு உடம்பு நஞ்சாகி பயங்கர விளைவுகளை எதிர்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

மருத்துவத்துறை இன்று பெருமளவு முன்னேற்றம் கண்டு வருகிறது. அந்த முன்னேற்ற வரிசையில் இதுவும் ஒன்று.

# இறந்த உடலில் ஆதிக்கம் செலுத்தும் நுண்ணுயிர்கள்

விஞ்ஞான உலகில் தற்போது மேற்கொள்ளப்படும்ஆய்வுகள் வியக்கத்தகு தகவல்களை வெளியிடுகின்றன அரிசோனா சர்வகலாசாலையில் உயிரியல் ஆராய்ச்சியாளரான கரோல் ஒஸ்லோன் என்பவர் மனித உடல்களை இறப்பின்பின்னர் அரிக்கும் நுண் உயிரினங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

மனிதஉடலுக்கு மத அனுட்டானங்களின் படி நிலத்தில் புதைக்கப்படுகின்றன அல்லது தீ மூட்டி எரிக்கப்படுகின்றன. இதுகாலவரையில் இந்த இயற்கை நீதிக்கு எந்தவிதமான இடையூறுமின்றி நடைபெற்று வரலாயிற்று.

ஆனால் அண்மையில் அரிசோனா சர்வகலாசாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு புதிய பாதைக்கு திசை திருப்பப்படலாம் என நம்பப்படுகிறது.

ஒரு நாள் திடீரென ஒரு கிராமிய மருத்துவ பரிபாலகர் ஒருவர் தொலைபேசி மூலம் ஆராய்ச்சியாளருடன் தொடர்பு கொண்டு, மனித உடலின் புழுக்கள் ஏறத்தாழ ஒரு அடி உயரத்திற்குப் பாயும் சக்தி கொண்டன. விரைவில் பல்கிப் பெருகுகின்றன. வந்து பார்வையிடுமாறு அழைப்பு விடுத்தார்.

அதனால் விளைந்த ஆய்வுகளே சில வியத்தகு தகவல்களை வெளியிட்டுள்ளன.

அரிசோன பொலிஸ் பிரிவின் ஆதரவில் இந்த ஆய்வுகள் தொடர்ந்தன. ஆன்மாவைப் பிரிந்த உடலில் புழுக்களின் ஆதிக்கம் அதிகம். மணிக்கூட்டு கம்பியின் வேகத்திலேயே இறந்த உடலின் பூச்சி புழுக்களின் வளர்ச்சியும் அமைந்துள்ளது.

மரணம் சம்பவித்து சில நிமிடங்களிலேயே இந்த உயிரினங்களின் ஆதிக்கம் ஆரம்பிக்கின்றது அதன் வேகமும் வளர்ச்சியும் திட்டமிட்டுக் கூறமுடியாத செயற்திறமை மிக்கதாகவும் உடல் முழுவதும் ஒரே நேரத்தில் ஒரே தன்மையுடன் செயலாற்றி வருகிறது. எனவே இதை மிக நுணுக்கமாக பரீட்சிக்க வேண்டிய ஆய்வு என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒருவனுக்கு மரணம் சம்பவிக்கும் நேரம் அருகாமையிலிருந்து ஆய்வுகளை மேற்கொண்டாலேயொழிய பல்கிப் பெருகும் உயிரினங்களை அழிக்க முடியாதெனவும் தெரிவிக்கின்றனர்.

சிறுகதை

# இவர்கள் போன பிரகு....

**விடத்தல்தீவு மைக்கல்**

அன்று பெய்தமழையால் அந்நிலம் சற்றுச்சகதி படிந்தாற்போல் இருந்தது. காலையில் எவரும் வந்ததற்கான தடங்கள் தெரியவில்லை. மாலைக் கருககலுக்கு முன்னதாக நான் எப்படியாவது மடுவுக்குச் சென்றுவிட வேண்டுமென்ற ஆவல் அவனில் ஆழமாகப் பதிந்திருந்தது'

காற்றின் நிர்ச்சலனம் அந்த அடர் காட்டின் அமைதிக்கு உரமிட்டது. சகதி நிலத்தில் சறுக்கும் இவனது கால்களின் சப்தம் மட்டும்''சதக், சதக்'' என்றபடி ஓசையெழுப்பியது. தொடர்நடைஎன்பதால்சற்று மூச்சிரைத்தது. அமர்வதற்காகப் பாறிப்போன பாலை மரம் ஒன்றின் மீது அவன் போன வேளை கிளைகளின் அசைவுகள் அவனுக்கு அச்சத்தை உண்டுபண்ணியபோதும் பேசாது இருந்துவிட்டான். தூரத்தில் யானை ஒன்றின் பிளிறல்கம்பீரமாகத்தொனித்தது.

காற்றேஇல்லாமல் அக்காடு சிறிதாகக்கூட அசைவதென்றால் அதில் ஏதோ ஒரு வித்தியாசம் இருக்கத்தான் செய்யும்.

அவன் மீண்டும் அச்சத்துடன் கிளைகளின் இடைவெளிகளைநோக்கினான் பட்டமரக் கொப்பிலிருந்து காட்டுப்புறாவொன்று 'படக் படக்' எனச் சிறகடித்த வண்ணம் கிளம்பியது.சற்றேநேரம் உடல் கனத்தது.இதயம் துடுப்பெடுத்தது.

வீரியமாகவளர்ந்திருந்த பற்றைக்குள் தோன்றிய தனியன் பன்றியொன்று மூசி மூசி வருவதைக்கண்டான்.''தூ''என்றவாறு இவனது மனம் விழித்துக்கொண்டது.பேசாதுஅவன் எழுந்து நடக்கத் தொடங்கினான். அப்போதுதான் அப்பாதையில் காட்டுக்கோழி ஓடியதற்கான தடம் தெளிவாகத் தெரிந்தது.

இரவு முழுக்க மாந்தையிலிருந்து ஓடிய ஓட்டம் கால்களில் ஏற்பட்ட கண்டல் காயங்கள், முட கிழிவுகள் இதனால் சற்று ஓய்வெடுக்க வேண்டுமென்றே பட்டது. தள்ளாடும் இவனது காலின் நோவுகள் இவனைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியது.

இருந்தும்தான் போகவேண்டிய இடத்தைச் சேருமளவுக்கு இவனது மனம் சோர்ந்து போகாது என்பதை அவன் நன்குஉணர்ந்திருந்தான். தாய் தந்தை, சகமாணவர், சகோதரர்,பாசம்,பந்தம்என்றுஅவன் நினைக்கும்போதெல்லாம் இது நாள்வரை அவன் அனுபவித்தது,அதைவிடக்கொடியதே.

ஆத்திரம் கண்ணை முட்டியது, இறுகக் கடித்த பற்கள். இமைக்கும் கண்களால் நீர் பரப்பியது. செந்நிற விழிகளுடன் அவனது நடை இன்னும் வேகமானது.

★ ★ ★

மழையின் தேம்பலால் ஓலைக் குடிசையுள் ஒளிந்திருந்த செல்லம்மா ஆச்சியின் சேலைக்குப் பின்னால் ஒட்டிப் போயிருந்த சறோஜினி; அம்மா,எணை அம்மாஎழும்பனணை நல்லாவிடிஞ்சு போட்டுது''

தாய் பெருமூச்சுடன் அடுக்களைக்குள் சென்றுவிட்டாள். தீப்பெட்டியும் மழைக்குச் சற்றுக் கசிந்து போயிருந்ததால் பக்கத்து வீட்டுப் புனிதம் அக்காவிடம் சென்று சிரட்டைக்குள் நெருப்பள்ளி வந்தாள். சற்றுநேரம் ஊதுகுழலால் '‚ஊங் ஊங்''என்றபடி அவள் அந்தஅதிகாலையிலேயே வியர்த்துப்போனாள் நெருப்புப் பற்றியவுடன் தேநீரை வைத்து விட்டு அடுக்களைவேலைகளை மிக அவசரமாகச் செய்து கொண்டிருந்தாள்.

''இண்டைக்கு மன்னாருக்குப் போகவேணும், எத்தின நாளைக்குத்தான் அவனைப் பாக்காமஇருக்கிறது அவரைக் கூட்டிக்கொண்டு போகச் சொன்னா ஒரே குடிச்சுக் கொண்டு திரியுது அதிரபாட்டிலை போன தவணைக்கும் அவன் லீவில வரயில்ல. இந்தத் தவணைக்காவது வருவானா என்றுபார்த்தா அதுவுமில்ல. எப்படியாவது இண்டைக்குப் போகத்தான் வேணும்'' எண்ணங்கள் அனலாகஎரியும்நெருப்பின் முன்மோதி மோதிவெகுண்டது.

பல்துலக்கி வந்த சறோஜினி படலையைப் பார்த்தவாறே சென்றாள். ''அது யாரு புள்ளை?'' தங்கத்தின் குரல்

''நம்மட தபால்கார அண்ணன்''

''கடிதம் ஏதும்வந்ததோ?'' என்றபடி வெளியில் வந்தாள்.

''என்னண்டாத் தங்கமக்கா இவ்வளவு நாளும் பிரச்சினையால தபால் பொதிகளொண்டும் சரியாக் கிடைக்கேல்ல... இது உங்களுக்கு மன்னார் கொஸ்ரலிலையிருந்து வந்திருக்கவேணும்'' என்றபடிநீட்டினான்

பெரும்ஆவல்களுடன் அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள் சறோஜினி.

அன்புடன் றெஜி அவர்களுக்கு,

நீங்கள் போனதவணைக்கும் இங்கு வரவில்லை இந்தத் தவணைக்காவது வருவீர்களா எனப் பார்த்தோம் அதுவும் காணவில்லை மிக்கவேதனைப் பட்டோம்.வீட்டில் ஏதும் கஷ்ரமா? அதனால் உழைக்கச் சென்றுவிட்டீரா? அப்படியாயின் இந்தப் பாதருக்குச் சிறு கடிதம மூலம் சொல்லலாமே. வேறுவிடயமில்லை. இத்துடன் எனது சிறு கடிதத்தை முடித்துக்கொள்கின்றேன்.

இப்படிக்கு.
உன் அன்புள்ள பாதர்,

கடிதம் படித்து முடிவதற்கு முன் எல்லோரது முகங்களிலும் பலிக்கடாவின் சோகம் கவிந்திருந்தது-

''ஐயோ என்ரை ராசா எங்கேடா போறறே''தங்கம் அலறினாள்- பயத்தினால் நடுங்கினாள்-

'இந்தப் பிரச்சினையான நேரத்தில நீஎங்கபோனாயோ' செல்லம்மா ஆச்சியின்அழுகை தொனித்தது- சறோஜினிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை- வீட்டிற்குள் ஓடிச் சென்று தலையணைக்குள்தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள்-

வேதநாயகத்துக்கும் செய்தி எட்டிவிட்டது- வேதனைகள் அன்று அளவு மீறிப்போய்விட்டன- அன்றிலிருந்து அவர்கள் எல்லோரது மனங்களிலும் ஒரு எதிர்பார்ப்பும்,ஏக்கமும்நிறைந்திருந்தன- மாலையின் இருளிற்குள் சோகமான தன் கதிர்களை மறைத்துக் கொண்டு சென்றான் சூரியன்.

★ ★ ★

வேகமாகப் போய்க்கொண்டிருந்த பஸ் பிறேக் போட்டபடி நின்றது-சனங்களின்நெருக்கடியால் அதற்குள் நடைபெற்றசலசலப்புக்களை றெஜியினால் கிரகித்துக்கொள்ள முடியவில்லை-கம் யில்தொங்கிய படியே நின்றுகொண்டிருந்தான்-''இந்தஇளம்பொடியனைத்தான் ஏதும் செய்து போட்டிடுவாங்கள்'' பஸ்சிற்குள் கிழவியொருத்தியின்குரல் இவனின் காதில் விழுந்தது- திகைத்துப்போய் நின்றவன் என்ன செய்வதென்று தெரியாது தடுமாறினான். எல்லோரும் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்- ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் முகங்களை அடிக்கடி அடையாள அட்டையில் பார்த்துக் கொள்கிறார்கள்- இவன் மட்டும்?

''ஐயோ நான் இண்டைக் கெண்டு விட்டிட்டு வந்திட்டனே'' ஏக்கம் மேலிட்டது: ''அதுவேறு தலையாட்டி ஒருவனும் பக்கத்தில நிக்கும் போது'' அழவேண்டும் போல இருந்தது- ''ஓடவும் மனம்வருகுதில்லை-ஓடினா இந்தச் சனத்தையெல்லாம் சுட்டிடுவான் மனம் படக் படக்கென அடித்தது-

தலையாட்டி தன் கறுப்புக் துணிக் கண்களால் இவனை நன்கு உற்றுப்பார்ப்பதை அறிந்தான்- கால்கள் உதறலெடுத்தது-அவனது சைகையும்அதற்கேற்றாற்போல் அசைந்தது- அவன் ஆடிப்போய் நின்றான்-

''எல்ரீற்டி பக்கா'' தமிழ் தெரியாத ஹிந்திக்காரன்கேட்டான்.

''நோ சார்!நோ'' தெரிந்த இங்கிலிசைப் பயன்படுத்தினான் றெஜி- அவன் அதட்டினபடியேநீட்டினான்துவக்கை. நெஞ்சு கனத்தது-வரிசையாக வந்த சனங்கள் எல்லோரும் இவனையே பரிதாபத்துடன் பார்த்தார்கள்-

''எந்த ஊர்ப் பெடியனோ தெரியாது பாவம் பிடிச்சிட்டான்''ஒருவனின் குரல்

பிடித்தவன் சும்மாவா விடுவான், அடி, உதை, வதை எல்லாம் அவனுக்குத் தானே தெரியும். இந்த ரோட்டில் வைத்தே இப்படியென்றால் இனிக் காம்பிற்குள் நடக்கப் போவதை எவர் கண்டார் ஆறு மாதச் சிறைவாசம். அவனில் அரும்பிய மீசையும், மிருதுவான வளர்ந்த சோகத் தாடியும், முகத்தின் கண்டல் தழும்புகளும் இருளைப் போலவே காட்டி தந்தது.

சித்த வேதனை என்பது அவனுக்குத்தான் தெரியும். நகததைப் பிடுங்குதலும், சிகரட்டால் சுடுவதும், கண்டல் பட்ட காயத்திற்கு நெருப்பிடுவதும் அப்பப்பா கொடியதிலும் கொடிய வேதனை இவனுக்கு. இதற்கிடையில் மண் வெட்டுதல், விறகு கொத்துதல் எல்லாமே இவன் தான்.

மனவேட்கையின் தவிப்பாக இருந்தது.

''ஒன்றுமறியாத என்னைக் கொண்டுவந்து இப்பிடிச் செய்யிறாங்களே. பாவிகளே. நான் மட்டும் வெளியிலை இருந்தா உங்களை உசிரோட விட மாட்டன்''.

அடைக்கப்பட்ட சிறைக்குள்ளிருந்து அனர்த்தங்கள் தோன்றின. யாரும் அறியாத நேரத்தில் எப்படியாவது தப்பிவிட வேண்டுமென்ற ஆவல் அவனுள் நெடு நாளாகவே கனத்திருந்தது. குடும்ப நிலையை நன்றாகவே உணர்ந்தவன் அவன். ஒரு நாடு எங்ஙனம் அழிவுறுகின்றது என்பதை உணர்ந்தவன், அதற்காகத் தன்னையே அர்ப்பணிக்கச் சிறையுள் தவிப்பவன், வழி தேடினான்.

அது பௌர்ணமிக் காலம். அன்றிரவு முழுக்க ஒரே களியாட்டமும். கூத்தாகவுமே இருந்தது. ஒவ்வொரு விடுதிகளின் விளக்குகளும் இடைவிட்டு விட்டு எரிந்தது- தட்டுக்கோப்பை மட்டும் இவனது ஆயுதமாகக் கிடைத்தது. சிறைக்குள் வந்த சிப்பாய் இவனை எழுப்புவதற்காக உள்ளே வந்தான்.

நித்திரைபோன்று பாசாங்கு செய்தவன் சட்டென்று எழுந்து சிப்பாயின் தலையில் ஒரே அடியுடன் வெளியேறினான்- காடு, மேடு தாண்டிக் கடைசியில் மடுவுக்குச் சென்றான்-

★ ★ ★

''பிள்ளை தங்கம் வெடிச் சத்தம் கேக்குதோ?''

'கோவிற்குளச் சந்தியில போல ஒரே சண்டையாக்கும், அதுதான் இந்தமாதிரி வெடிச் சத்தமெல்லாம் கேக்குது''.

நடுச்சாமம் பன்னிரண்டு மணியிருக்கும், நாலைந்து போராளிகளுடன் றெஜி தன் வீட்டுற்குள் சென்றான்- எல்லோரும் பயத்தினால் பிடித்துப் போனார்கள்-

''ஆரது .. ஆரது ..'' கிழவி செல்லம்மா நடுக்கத்துடன் குரல் கொடுத்தாள்-

''அது நானாச்சி .. நீங்க ஒண்டும்பயப்படாதேங்கோ''-

ஓலைக் குடிசைக்குள் படுத்திருந்த சறோஜினி ''அண்ணாட சத்தம் மாதிரித் தெரியுது'' என்றாள்-

தாய் ஓடிவந்து பார்த்தாள்- இருட்டாக இருந்ததால் அவனை உடனேயே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை- இரண்டு வருடங்களுக்கு முன் கொஸ்ரலுக்குப் போன மகனைத் தாய் இப்போது எதிர்பார்க்காத நேரத்தில் சந்தித்ததில் பெரும் சந்தோசம்-

''தம்பி எங்க ராசா போனனி'' அழவேண்டும் போல இருந்தது-

''அதெல்லாம் பிறகு சொல்லுறன்- இப்ப அவன்வருவான் அதுக்கிடையில மாற வேணும். தேயிலைத் தேத் தண்ணி ஊத்தணை'' என்றபடி தங்கையைப் பார்த்தான்-

அண்ணன் இப்படிச்சிரிப்பது இவளுக்குப் பெரும் புதிராக விருந்தது! ''பாரன் ஆளை, துவக்கும் உடுப்பும்!'' அழுகையுடன் சேர்ந்து சிரிப்பு வந்தது- தேநீர் குடித்து முடிந்தவுடன் அவன் அவசரமாக ''அப்ப நாங்கள்போறமம்மா'' என்றபடி தன் நண்பர்களுடன் படலை தாண்டினான்-

''இம்... இப்பவாவது எவ்வளவு நிம்மதி தெரியுமா? '' கிழவி பெருமூச்சு விட்டாள்-

வேட்டுச்சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது- வேகும் தணல் நெருப்புள் இவள் மனமும்வெந்து கொண்டிருந்தது- ''என் மகன், நான் நினைத்ததை விடநன்றாகவே நடந்திருக்கின்றான் .. அவன் போனது நல்லதுதான், இல்லாட்டில் இப்போது யாராவது பிடிச்சுக்கொண்டு போயிருப்பான்கள்...''

''அம்மா அண்ணா இனி வராதாம்மா''

''வருவான் தானம்மா இவங்கள் போன பிறகு''

## எனைச் சிறை செய்யினும் செய்க

இதோ, நான் ஒருவன்
இங்கிருக்கிறேன்!
எனைச் சிறைச் செய்யினும் செய்க!
ஈழத்தமிழரை
ஆதரிக்கின்றேன்!
என்தலை கொய்யினும் கொய்க!
அதோ என் தமிழரைச்
சிங்களவர் கொல்வார்!
ஆடும் என்தசை நரம்பு எல்லாம்!
அடடா! உலகம்
கேட்டிடும்; பார்த்திடும்!
ஆயினும் அதன் மனம் கல்லாம்!
'எழுதினால் பேசினால்
சிறையிடுவோம்' என
எந்தமிழ் அரசு கூறிடுமோ?
எவளோ ஒருத்தி
எமை ஆள்வதினால்
எம்முடல் உணர்வுமாறிடுமா?
பழுதுலாக் கொள்கையால்
உரிமை கேட்கிறார்!
பதடிகள் அதைத்தவறென்பதா?
பற்பல இளைஞர்கள்
பெண்கள் சாகின்றார்;
பார்த்துக் கொண்டே மலம் தின்பதா?
இந்தியர் என்றால்
இரும்பு அவர் உள்ளம்!
ஈழத்தமிழர் எம் இனமே!
எங்கவர் வாழினும்
எம்மவர் அன்றோ?
இவர்க்குயிர் துடிக்கும் எம் மனமே!
வெந்துயிர் விடுபவர்
மக்களே என்றால்
வெறும் அரசியல் நோக்கு எதற்கு?
வேற்று நாட்டினர் எனின்
பாலஸ்தீனர், ஆப்
பிரிககருக் கிரங்குதல் எதற்கு

- பாவலரேறு பெருஞ்சித்தரனார்-

# ஜனாதிபதி பிரேமதாஸ மற்றொரு கண்டத்திலிருந்து தப்பிவிட்டார்

நிலாந்தன்

“ஒரு சலவைத் தொழிலாளியால் எங்களுடைய பெரிய பெரிய ஆட்களெல்லாரும் கொல்லப்படுகிறார்கள்” இப்படி ஒரு சாதாரண சிங்களவர் தன்னிடம் கூறியதாக கொழும்பிலிருந்து வந்த நண்பர் ஒருவர் கூறினார். தளபதி கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகளின் போது அவர் கொழும்பில் நின்றவர். தமிழர்களிடம் தான் சாதி கூராக இருக்கிறது என்று நினைத்தேன். ஆனால் சிங்களவர்களிடமும் அது கூராகத்தான் இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

உண்மைதான், சிங்களவர் சமூகத்தின் தலைமை என்பது கொயிகம சாதியினராலும் அநேகமாகக் கண்டிச் சிங்களவராலும் நிரப்பப்படும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இந்தக் கொடூரமான பின்னணியில் ஒரு முரணாக எழுச்சி பெற்றவர்தான் சில சைக்கிள் றிக்‌ஷாக்களின் உரிமையாளரும் ஒரு சிறு முதலாளியுமான ரணசிங்காவின் மகன் பிரேமதாஸ. அவருடைய மனைவி பண்டாரவளையைச் சேர்ந்த ஒரு கொயிகம பெண் அவருடைய மகள் ஒரு கொயிகம சாதியைச் சேர்ந்தவரைத்தான் திருமணம் செய்துள்ளார். எனினும் அவரைப் பற்றி சிங்களவர்களின் மனதில் விழுந்த படிமங்களை அகற்றுவது என்பது அவரைப் பொறுத்தவரை விரக்தியும் இயலாமையும் கலந்த ஒரு போராட்டமாகவே அமைந்துவிட்டது.

அவருடைய எதிரிகள் அவரைக் ‘கறுப்புப் பூனைகளின் பிதா’ என்று அழைக்கிறார்கள். அவர் சோதிடர்களினதும், மாந்திரீகர்கள், வசியக்காரர்களினதும் நண்பர் என்று கூறுகிறார்கள் அவர் கல்வி அறிவு குறைந்தவர் என்றும் அதனால் கல்விமான்களைக் கண்டு அஞ்சுகிறார் என்றும் கூறும் அவர்கள் சில சமயங்களில் அவருடைய மனைவியைப்பற்றியும் விமர்சிக்கிறார்கள்.

ஆனால் பிரேமதாஸ இவைகள் எதனாலேயும் பாதிக்கப்படாதவராகக் காணப்படுகிறார். எத்தகைய அவதூறுகளும் இழிசொற்களும் அவரை உலுப்புவதாக இல்லை இன்னொரு விதமாகச் சொன்னால் இத்தகைய அவதூறுகளும் இழிசொற்களும்தான் அவரது உளவியலை உருவாக்கியுள்ளன எனலாம்

சிங்களவர் சமூகத்தின் ‘முடிக்குரிய தகுதிகள்’ தன்னிடம் இல்லையென்று அவரிற்குத் தெரியும். எனவே அத்தகைய தகுதிகளை வேறு விதங்களில் எய்துதற்கான எத்தனங்களே அவரது அரசியலாகிவிட்டன. அவர் கட்டிய லட்சக்கணக்கான வீடுகளும், ஜனசவிய திட்டங்களும், தன்னை ஒரு அசல் பௌத்தனாகக் காட்டிக்கொள்ள முயல்வதும், இந்தியாவிற்கு எதிரான அவரது விட்டுக் கொடுப்பற்ற கடும் நிலைப்பாடும் இவ்விதம் அவரது உளவியலுக்கூடாகப் புரிந்து கொள்ளப்படவேண்டியவைதான்.

பொதுவாக மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் தம்மை நிரூபிப்பதற்கான எத்தனங்களில் இலகுவானதாக வன்முறையைத்தான் தெரிவு செய்கின்றன. அதற்குரிய துணிச்சலும், அதனாலுண்டாகும் விளைவுகளை எதிர்கொள்ளக் கூடிய வாழ்முறையும் அவர்களிடம் காணப்படுகின்றன. பல சமயங்களில் வன்முறை அவர்களது அடையாளமாகவும் ஆகிவிடுகின்றது.

இத்தகைய பின்னணியிலிருந்துதான் பிரேமதாஸா உருவாகிறார் ஜே வி பியை நசுக்குவதில் அவர் கையாண்ட இரக்கமற்ற வழிமுறைகளைப் பற்றி வொஷிங்ரன் போஸ்ற்றைச் சேர்ந்த ஸ்ரீவ் கோல் பின்வருமாறு கூறுகிறார்; இலங்கைத் தீவில் அவரோடு மோதிய பேய்கள் அவர் தலைமை தாங்கிய பேய்களைவிடவும் பெரியவை” ஸ்ரீவ் கோல், பிரேமதாஸாவுடன் கடமையாற்றிய மேற்கத்தைய ராஜதந்திரி ஒருவரையும் மேற்கோள் காட்டுகிறார். ‘நான் அவரைஇப்பொழுதும் வெறுக்கிறேன் எனினும் அவர் சரியான நேரத்தில் (ஜே வி.பி. யின் காலத்தில்) சரியான ஆளாக விருந்திருக்கிறார்.’ என்று அந்த ராஜதந்திரி கூறுகிறார் (லங்கா கார்டியன், ஏப்ரல் 1, 1992). அநேகமான கொயிகமவினரும் இவ்வாறு தான் நம்புகிறார்கள் ஜே. வி. பி. யோடு மோதுவதற்குரிய தகுதி பிரேமதாஸாவிடமே காணப்பட்டதாக அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் ஜே வி பி யின் அச்சுறுத்தல் விலகியுள்ள இன்று வழமைபோல கொயிகமவினரிற்கான இடத்தை அவர் விட்டுத்தர வேண்டும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். கடந்த வருடம் கொயிகமவினர் ஜனாதிபதிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். கட்சி பேதங்களைத் தாண்டி ஒன்றுபட்ட கொயிகமவினர் ஜனாதிபதி சற்றும் எதிர்பாராத ஒரு தருணத்தில் தாக்குதலை ஆரம்பித்தார்கள். இது நடந்து சரியாக ஒரு வருடம் கழித்து சில தினங்களில் மற்றொரு வாய்ப்பு கொயிகமவினருக்குக் கிட்டியது. கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான தீர்ப்பு ஜனாதிபதியை நெருக்கடிக்குள்ளாக்கப் போகிறது என்று கொயிகமவினர் எதிர்பார்த்தார்கள். எனினும் பிரேமதாஸா இதற்குமுன் தன் சந்தித்த கண்டங்களை எவ்விதம் கடந்து வந்தாரோ, அவ்விதம் வெகு அலட்சியமாக இந்தக் கண்டத்தையும் கடந்துவிட்டார். இனி கொயிகமவினர் ஜனாதிபதித் தேர்தல்வரை-குறைந்தது இரண்டு வருடங்களிற்காவது காத்திருக்க வேண்டியது தானா?

வழக்கின் முடிவை ஜனாதிபதி ஏற்கனவே திட்டமிட்டுவிட்டார் என்று அவதானிகள் கூறுகிறார்கள். குறிப்பாக வழக்கை நீண்ட காலத்துக்கு இழுத்தடித்தலாலும், நீதிபதிகளை நான்கு தடவைகள் மாற்றியபோதும் ஜனாதிபதி தனக்குச் சாதகமாக காய்களை நகர்த்திவிட்டார் என்றே மேற்படி அவதானிகள் கூறுகிறார்கள். தீர்ப்பு வழங்கிய அமர்விலிருந்த நீதிபதிகளில் பிரதம நீதியரசர்கள் ஜீ பி. எஸ். டி. சில்வா ஒரு கொயிகம அல்ல. மற்றொருவர் திரு. பிரியந்த பெரேரா இவரும் கொயிகம அல்ல மூன்றாவது நீதியரசர் திரு. பி. ராமநாதன் ஒரு தமிழர்,

[7-ம் பக்கம் பார்க்க]

# சாஸ்திரியவிதியுடன் புதியனபுகுத்தி ரசனையை திருப்திப்படுத்தலாம்

உங்களுக்கு எப்போது முதல் இக்கலையில் ஆர்வம் உண்டாயிற்று? நாதஸ்வர இசையைக் கற்கும் வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

★ எனக்கு ஆர்வம்உண்டாகி நான் கற்றுக் கொண்டேன் என்று சொல்ல முடியாது. ரியூட்டறி போவது போல் போய் மாலையில் கொஞ்ச நேரம் நான் இக் கலையைப் பயிலவில்லை நாதஸ்வரஇசை எனது உளநிலை உணர்வோடு தொடர்புகொண்டது ஏன், எனது இரத்தத்தில் அது ஊறியது எனலாம். எமது குடும்பமே ஒரு நாதஸ்வர இசைப் பாரம்பரியம் கொண்ட குடும்பந்தான் குழந்தைப் பருவத்தில் எனது தகப்பனார் வீட்டில் உட்கார்ந்து காலையில் அப்பியாசம் செய்யும் போதெல்லாம் நாதஸ்வர இசையை உள்வாங்கிக் கொள்வேன். ஏழெட்டு வயதிலேயே பயில ஆரம்பித்துவிட்டேன் எனக்குக் குரு எனது தந்தையார் கந்தசாமி தான். இன்று நான் நன்றாக வாசிக்கிறேன் என்றால் அதற்கு அவர் தான் காரணம். எனது மைத்துனர் கந்தசாமியும் ஒரு நாதஸ்வரக் கலைஞர். அவரும் ஆதரவாகச் சில சங்கதிகளைச் சொல்லித் தந்தார். எனது 28ஆவது வயதில் தஞ்சை ஜில்லாவில் எஸ். பி. பி எம். திருநாவுக்கரசுப்பிள்ளையிடம் சுமார் ஆறு மாதங்கள் பாடம் கேட்டேன் அதற்குப் பிறகு திருச்சேறை கிருஷ்ணமூர்த்தியிடம் முறைப்படி சில உருப்படிகளை மனனம் செய்தேன், குழந்தைப்பருவச் சூழலும். வித்துவான்களுடைய ஆதரவுமே என் வெற்றிக்குக் காரணம்.

நீங்கள் அரங்கேறிய காலத்திலிருந்த மேதைகள் யார்? அவர்கள் ஒத்துழைப்பு வழங்கி ஆதரித்தார்களா?

★ நல்லூர் முருகையா, சாவகச்சேரி அப்புலிங்கம், மாவிட்டபுரம் ராஜா ஆகியோர் நாற்பதுகளில் எனது ஆரம்ப காலத்தில் நாதஸ்வர மேதைகளாவர். அவர்களின் பூரண ஆதரவு எனக்கிருந்தது. தமிழ் நாட்டு நாதஸ்வர வித்துவான்களின் ஆதரவுக்கும் குறைவில்லை. திருநெல்வேலி சண்முகக்குடி, கும்பகோணம் சண்முகசுந்தரம், பந்தனை நல்லூர் தட்சணாமூர்த்தி, திருவாதூர் இராஜரத்தினம், திருமெய்ஞானம் நடராஜசுந்தரம் ஆகியவர்களோடு நான் சேர்ந்து நாயனம் வாசித்திருக்கிறேன். இவர்களோடு சேர்ந்து கச்சேரி பண்ணுவது எவ்வளவு சிரமசாத்தியமான விஷயம்என்பது இசையுலகில் பழகியவர்களுக்குத்தான் தெரியும். நாதஸ்வர சக்கரவர்த்தி திருவாடுதுறை டி. என். இராஜரத்தினம்பிள்ளை அவர்கள் தன்னுடன் திருவாடுதுறைக்கு வரும்படிஎன்னைஅழைத்தார் இவ்வாறு எல்லோரின் ஆதரவும் எனக்கிருந்தது.

இன்றைய உலகின தலை சிறந்த நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதன் ஐரோப்பிய நகரங்கள் பலவற்றில் லண்டனிலும். பாரிஸிலும் பல கச்சேரிகள் செய்துள்ளார்- லண்டனில நேஷன் வைவிட் புறோக்கிராம் என்ற மீடியா நிகழ்ச்சியில் வேஷ்டியோடு தோன்றி நாயனம் வாசித்த முதல் தமிழர் என்ற பெருமை இவரைச் சார்ந்தது. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் உபயத்தில் சேலம் மோகனூரில் எட்டு மணித்தியாலம் கச்சேரி செய்து தனது பெயரைப் பதிவு செய்து கொண்டவர் சென்னை மியூசிக் அக்கடமியில் வாசித்த முதல் இலங்கையரும் இவரே. கலைக்கு அரும்பெரும் தொண்டாற்றிவரும் இம்மேதைக்கு நூற்றி ஐம்பது அந்தணர் கலந்து கொண்டு மூன்று தினங்கள் சஷ்டியப்த பூர்த்தி விழா எடுத்தார்கள் கலை இலக்கியத் துறை சார்ந்த எவருக்கும் இது போன்ற ஒரு விழாவை இதுவரை தமிழ் கூறும் நல்லுலகம் எடுத்ததில்லை.



எஸ்.கே. பத்மநாதன்

நாதஸ்வர இசைக் கலையை நம்பி எத்தனை குடும்பங்கள் யாழ் குடாநாட்டில் இருக்கின்றன அவர்களின் தொழில் வாய்ப்பு நிலை எப்படி?

★ சுமார் இருநூறு குடும்பங்கள் இருக்கின்றன. இவர்களில் நூற்றுக்கு முக்கால் வாசிப்பேர் நாயினத்தையே நம்பியிருக்கிறார்கள். அதை விட்டால் வேறு வழியில்லை. மாற்றுத் தொழில் தெரியாது இப்போது கச்சேரிகளும் மிகக் குறைவு. கோயில்களை நம்பித் தான் பல குடும்பங்கள் வாழ்கின்றன திருவிழாக் காலங்களில் ஏனோ தானோ என்று வாழ்க்கை ஓடுகிறது. வசதிபடைத்தவர்கள் சிலர் மங்கல காரியங்களுக்கு அழைக்கிறார்கள். கச்சேரிகிடைத்தால் நாயனம், தவில் ஆகியவற்றை ஓட்டோவில் கொண்டு சென்று திரும்பிவா அதிக செலவாகிறது. செலவுக்கேற்ற வருவாய் இல்லை. அன்றாடம் செலவுக்கே கஷ்டப்படுகின்ற குடும்பங்கள பல உள்ளன பட்ட குடியே படும் என்பது போல் இசைப் பதிவு நாடாக்களும் நாதஸ்வரக் கலைஞரைப் பெரிதும் பாதித்துள்ளது

விழாக்களிலும் பதிவு நாடாக்களை கெஸட்) பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். இசையாளர் அபிவிருத்திச் சங்கம் என்று ஒரு சங்கம் வேறு. அதுவும் சரியாகச் செயற்படுவதிலலை. இந்த நிலையில் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கும் நாதஸ்வரக்கலைஞர்களினகதிஎன்ன? நாளைக்கு என்ன செய்வது என்று நினைத்துக்கொண்டே இரவு படுக்கப் போகிற நிலை

நாதஸ்வரக் கலையை சில குடும்பங்களே காப்பாற்றி வருகின்றன பரம்பரையான தொழிலாகவே கருதப்படுகின்றது - ஏன்?

★ உதாரணமாக நான்கு வருடங்களுக்கு மேல் துர்க்கா பீடத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நாதஸ்வரக் கலையை அனைவரும் பயிலும் நோக்கமாக நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தீவிர நம்பிக்கையோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த மையத்தில் தவில், நாதஸ்வரம் ஆகியன பயில சுமார் எழுபது பிள்ளைகள் வரவு டாப்பில் தமது பெயரைப்பதிவுசெய்துகொண்டார்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மேல் நிலையம் காற்று வாங்கியது. நாதஸ்வரக் கலையைத் தங்கள் குடும்பத் தொழிலாகக் கருதிய பிள்ளைகள் தான் கண்ட மிச்சம். நிலையத்துக்கு மூடுவிழா நடத்தப்பட்டது, வதுரியில் மூன்று தலைமுறையாகப் போச்சு வேறு தொழில் துறை சார்ந்தவர்கள் இக் கலையைப் பயின்று செய்கின்றார்கள். ஒரு காலத்தில் இக் கலை ஒரு சாதியோடு இணைந்து இருந்ததுதான். இப்போது எல்லோரும் பழகலாம் எங்கு வேண்டுமானாலும் வாசிக்கலாம். கலையில் நாட்டமுள்ளவர்கள் நிச்சயமாக எதையும் சாதித்துவிட முடியும்- இந்தியாவில் பிராமணர்களும் முஸலிம்களும் நன்றாக வாசிக்கிறார்கள் கேரளத்திலும், தெலுங்கு தேசத்திலும் வாசிககிறார்கள் கலை சாதி சமயத்திற்கு அப்பாற்பட்டது. எவனுக்கு அருள் மற்றும் தனது சொந்தத் திறமையில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளதே அவனால் இக் கலையில் தேர்ச்சி பெறமுடியும்

வெகுஜன ரஸனையைத் திருப்திப்படுத்தும் கட்டாயம்

(6ஆம் பக்கம் பார்க்க)

பேட்டி: மதன்

## சாஸ்திரி

நாதஸ்வரக் கச்சேரியைக் கட்டுப்படுத்துகிறதா?

★ ரஸனையைப் திருப்திப் படுத்தவேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகிவிடும் போது, ஒரு கலைஞர் தன் சுதந்திரத்தை எப்படிச் செயற்படுத்தவேண்டும் என்பதற்கும் சில வரையறைகள் உள்ளன; சனங்களின் திருப்திக்காக எதையும் செய்யமுடியாது. சினிமாப்பாட்டை வாசிக்க இயலாது- வாசித்தால் அது தந்திரமான ஏமாற்றுதல். இடம் காலம் அறிந்து செய்வதுதான் கெட்டித்தனம். எனது அணுகுமுறை மிகத் தெளிவானது. சாஸ்திரிய விதிகளுக்கு அமையப் புதியன செய்து வெகுஜன ரஸனையைத் திருப்திப்படுத்தலாம். புதியன செய்யும்போது கூட சாஸ்திரத்தின் தார்ப்பரியம் மீறிச் செய்யக்கூடாது (உதாரணம்) வாசிப்பவரின் வழமைக்கும், செழுமைக்கும் கற்பனைக்கும் ஏற்ப கல்யாணியில் எத்தனை 'சாதனைகள் செய்யலாம்- வரையறைகள், எல்லைகளை மீறிச் செயற்படுதல் அபத்தம்.

தனியே நாயனம் வாசிக்கும் போது கிடைக்கும் சுதந்திரம் கற்பனைஆகிய சேர்ந்துவாசிக்கும் போது கிடைக்கிறதா?

★ தனித்து வாசிக்கும் அளவிலேதான் சாகித்தியம் நன்றாயிருக்கும். ஆனால் சேர்ந்து வாசிப்பதற்கு ஒரு நாதஸ்வரத்துக்குச் சமதையாக மற்றொரு நாதஸ்வரம் அமையுமானால் கற்பனை அலாதியான குண விசேஷங்களைக் கொண்டதாக அமையும். ஒரு கச்சேரியில் ஐந்து ஆறு பேர் சேர்ந்து வாசிப்பதால் உணர்வுகளில் வேறுபட்ட நிலைஉருவாகிக் கற்பனைக்கு இடமில்லாமல் போகலாம்-

தனித்தவில் என்ற பெயரில் தவில்காரர் கச்சேரியை ஆக்கிரமித்து வருகின்றார்கள் இதனை ஒரு ஆரோக்கியமான செயலென்று கருதலாமா?

★ முன்பும் அப்படித்தான் செய்தார்கள் அந்த முறையை பின்பற்றித்தான் தவில் இப்போதும் வாசிக்கப்படுகிறது- இது வழக்கமாகிவிட்டது இந்தியாவில் மணித்தியாலக்கணக்காய் வாசிப்பார்கள். அதில் எந்தவிதத் தப்பும் கிடையாது தவில்காரர் நீண்ட நேரம் எடுத்து வாசிப்பது கச்சேரியைக் குழப்பாது சனங்களின் ரசனையையும் இது பொறுத்தது பொங்கிஎழும் சனங்களின் 'அப்ளாஸை' ப் பெற சகபாடியான தவிலுக்கும் ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும் மற்றும்படி, கச்சேரியை முழுமையாகப் பார்க்காமல் தவில் நாதஸ்வரம் என்று பிரித்துப் பார்க்கும் அளவிலேதான் இப்படிக் கேட்கத் தோன்றுகின்றது-

மதுரை சோமு, செம்மங்குடி ஆகியவர்களின் வாய்ப்பாட்டு நாதஸ்வர பாணியைச் சேர்ந்தது தானா என்று கேட்ட போது

★ இவர்கள் ராகங்களில் பாடும்போது அல்லது சுரம் மிரஸ்தாரம் செய்யும்போது தவில், நாதஸ்வரக்காரர்களால் கையாளப் படுகிறபாணியையே பின்பற்றுகின்றார்கள்

கர்நாடக சங்கீதம் 'ஒரு பொழுதுபோக்குத்தான் பூசைககுரிய விஷயமல்ல'' என்று டாக்டர் பாலமுரளி கிருஸ்ணன் கூறியிருக்கிறாரே இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

★ ஆச்சரியங்கள் எங்குதான் இல்லைபாலமுரளிக்கிருஸ்ணன் ஊரறிந்த கலைஞர் அவர் கர்நாடக சங்கீதத்தை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பாடியிருக்கிறார் அவர் ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் சென்று கச்சேரி பண்ணுவது வர்த்தக அடிப்படையில்தான் அவர்கருதுவதுபோல் அல்ல கர்நாடக சங்கீதம், நாதஸ்வரம் கோயில்களில் வளர்ந்த கலை அதற்கு இன்றும் ஒரு தெய்வத்தன்மை உண்டு

இளம் கலைஞர்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

★ அந்தக் காலத்தில் குரு-சிஷ்ய முறையென்று மூன்று நான்கு வருடங்கள் குரு வீட்டிலேயே தங்கிப்பயிற்சிபெற்று வந்தோம் அந்நிலை அருகிவிட்டது இப்போதெல்லாம் ஏதோஇரண்டு மூன்று பாட்டுத் தெரிந்தாலே போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டது அதைக் கொண்டு வாசிக்கிறார்கள் குறைந்தது நான்கு ஐந்துவருடங்களாவது முறைப்படி கற்று மேடை ஏறவேண்டும்- தெய்வபக்தி, குருபக்தி, மூத்த கலைஞர்களை மதித்தல், ஒழுக்கம், சத்தியம்ஆகிய பண்புகளை இளைஞர்விருத்தி செய்ய வேண்டும்-

## செயல்

★ தலை சிறந்த செயல்கள் எவை? ஒருமனிதப் பிறவியின் மனதில் மகிழ்ச்சி ஊட்டுவது, பட்டினியாய் இருப்பவர்களுக்கு உணவு அளிப்பது. நலிந்தோர்க்கு உதவுவது, வேதனைப்படுவோர் வேதனையைத் தணிப்பது, புண்பட்டோருக்குச் செய்யப்பட்ட அநீதிகளைக்களைவது.

★ உலகில் ஒழுக, நீ உத்தம நெறிமுறைகள் வகுத்துக் கொளவதும் பின்பற்றுவதும் கூட போதாது அவற்றில் இருந்து எப்பொழுது மாறுபடுவது எதற்கு விதிவிலக்கு உண்டு என்பதையும் நீ அறிந்திருக்க வேண்டும்.

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலியும் "திதி" கிரியை அழைப்பும்

| வீர ஜனனம் | | வீரச் சாவு |
|---|---|---|
| 15 |  | 16 |
| — | | — |
| 11 | | 09 |
| — | | — |
| 1975 | | 1991 |

## வீரவேங்கை லோறன்ஸ்
### முருகேசு தயேந்திரன் (கண்ணன்)

தாயகத்தின் முகத்திலே
உன்சிரிப்பு தெரிகிறது
தமிழினத்தின் நெஞ்சிலே
உன் நினைவு வாழ்கிறது.

மகனே!

நீ மடியவில்லை!

வரலாறு படைத்த மணலாறுப் போரில் உன்னோடு வீரசுவர்க்கம் அடைந்த அனைத்து மாவீரர்களின் நினைவுகளையும் எங்கள் இதயத்தால் ஏந்திக் கொள்கின்றோம்.

இன்று (04- 9- 92) எமது இல்லத்தில் இடம்பெறும் ''திதி''கிரியை நிகழ்வில் கலந்து கொள்ள போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் மேற்கு, குடும்பத்தினர்.
புத்தூர். (3120)

---

ஞான வயிரவப் பெருமானின்

# அலங்கார உற்சவ விழா

புத்தூர் ஸ்ரீ மஞ்சவெண்ணா ஞான வயிரவப் பெருமானின் அலங்கார உற்சவவிழா இன்று வெள்ளிக்கிழமை (04-09-92) ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும்.

[/சி4998] பரிபாலன சபை

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

## கூறுவிலை

இப் பல்கலைக்கழகத்திற்கு வேப்பம் விதைகள் தேவைப்படுகின்றன. வேப்பம் விதைகளை வழங்க விரும்புவோரிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. ஒரு கிலோவின் விலையைக் குறிப்பிடுவதுடன் எத்தனை கிலோ விதைகள் வழங்கலாம் என்பதும் குறிப்பிடப்படல் வேண்டும். கடித உறையில் 'வேப்பம் விதைகள் வழங்குவதற்கான கூறுவிலைகள்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கூறுவிலைகள் இப்பல்கலைக் கழகத்தின் விலங்கியல் துறைத் தலைவருக்கு 18 - 09 - 1992 ஆம் தேதி மு. ப. 10 00 மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். கூறுவிலைகள் அதே நாளில் பி ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி/4994)

---

# NEW SCIENCE ACADEMY
# JAFFNA

## 93 A/L
## PAPER CLASS

PURE / APPLIED
MATHS
BY:

**குணசிங்கம்** B. Sc (Hons)

PURE: ஆள் கூற்றுகேத்திர கணிதம்
APPLIED: காயிகள்

**ஆரம்பம்: 5-9-92**

**SAT. 4.00 P. M**

[3125]

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## கடற்புலி நக்கீரன்
### (சங்கரலிங்கம் செந்தில்குமரன்)

[51, ஜெயவர்த்தனா வீதி, நாயன்மார்கட்டு]

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்; |
|---|---|
| 30-03-1975 | 22-07-1992 |

வீரம் விளைக்கும் வேங்கைகள் அணியில்,
தீரம் மிகுந்திட சேர்ந்தாய் நீயும்,
காவியம் படைப்பாய் என்றே காத்திருந்தோம்.
சாவினை அணைத்தொரு சரித்திரமானாய்.

சிவரஞ்சனி வீதி, நாயன்மார்கட்டு,
நாயன்மார் கட்டு, சனசமூக நிலையம்
யாழ்ப்பாணம். (சி 4968)

---

# 61-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| வீரப்பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 10 |  | 06 |
| — | | — |
| 03 | | 07 |
| — | | — |
| 1976 | | 1992 |

சாவையே சாகடித்து சரித்திரம் ஆகிவிட்ட

## வீரவேங்கை
## கலையரசன் (றொபின்சன்)
### (அரிகரிதாசன் டெரிக்நோத்)

04-09-199 2 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துயருறும்
மயிலிட்டி, குடும்பத்தினர்,
கற்கோவளம், பருத்தித்துறை. (3113)

# புலிகளின் ஊடுருவல்களை —இராணுவத்தால் தடுக்க முடியவில்லை

எதிரியின் எல்லைக்குள் ஊடுருவிச் சென்று, அவனின் வலுவிடம் ஒன்றைத்தாக்கியழித்த பின்னர், தனது எல்லைக்குள் திரும்பி வருதல். இது சிறந்த தாக்குதல் முறையாகக் கருதப்படுகின்றது

இத்தகையதாக்குதல்களால் ஒரு புறம் எதிரியின் திட்டங்கள் தடைப்பட்டுப் போகின்றன. முளையிலேயே கிள்ளியெறியப்படுகின்றன. மறுபுறம் அவனுடைய இருப்பு அவனுடைய எல்லைக்குள்ளேயே நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றது.

ஆனாலும் கூட, ஏனைய தாக்குதல்களை விட இவ்வாறான தாக்குதல்கள் மிகமிகக் கடினமானவை. முற்றிலும் சாதகமற்ற சூழலிலேயே, அதாவது எதிரியின் எல்லைக்குள்ளேயே இவை நடாத்தப்படுகின்றன. கச்சிதமான திட்டமிடலும், எதிரி எதிர்பார்க்காத வேளையிலும், இடத்திலும் நடாத்தப்படுதல். இவை யாவும் இணைந்தே வெற்றியை உறுதி செய்கின்றன

கடந்த மாதத்தின் இறுதி வாரத்தில் இப்படியான இரண்டு தாக்குதல்களைப் புலிகள் நடாத்தினார்கள். முதல் தாக்குதல் குடாநாட்டின் தென் எல்லைப்புறத்தில் சின்ன மண்டலாயில் நடாத்தப்பட்டது அடுத்த தாக்குதல், பண்ணைக் கடலுக்கப்பால், மண்டைதீவில் மேற்கொள்ளப்பட்டது.

பல வேகய இரண்டினை மிகப் பெரும் எடுப்பில் சிங்களப்படை நடாத்தியது. ஒரு இராணுவ வேலியை' உருவாக்கி வைத்திருந்தது. சிங்கள தேசத்தில் இது பெரும் இராணுவ வெற்றியாய் எடுத்துக் கூறப்பட்டது. குடாநாட்டினுள் புலிகள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாய் சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இருந்த போதும், கடந்த 28ஆம் திகதி அதிகாலையில் எதிரியை அவனின் எல்லைக்குள்ளேயே புலிகள் எதிர் கொண்டார்கள். நவீன ஆயுதங்களையும், ஆயிரக்கணக்கான சுற்று வெடிமருந்துகளையும் கையகப்படுத்திக் கொண்டார்கள்.

மறுநாளும், அதாவது 24-ம் திகதி அதிகாலையிலும் அவர்கள் பண்ணைக் கடலைத் தாண்டிச் சென்றார்கள். கடற்படையின் முகாம் பகுதியிலேயே வைத்து வாட்டர்ஜெட் போட் என்ற நவீன நீருந்து விசைப்படகொன்றைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

சென்ற மாதத்தின் இறுதி வாரத்தின் இரு நாட்களில் அடுத்தடுத்து நடாத்தப்பட்ட இத்தாக்குதல்கள் இரண்டு வகையான முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளன.

முதலாவதாக கைப்பற்றப்பட்ட எதிரியின் வளங்கள், அதாவது இராணுவத் தளபாடங்கள். சின்ன மண்டலாயில் 9000 சுற்றுகளுக்கு மேற்பட்ட வெடிமருந்துகளும், நவீன ரக துப்பாக்கிகளும், மண்டைதீவில் நீருந்து விசைப்படகும், நீர்க்காபபு உடைகள் உட்பட இராணுவப் பொருட்களும் கையகப்படுத்தப் பட்டமை.

இதன் முக்கியத்துவம், ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்தைப் பொறுத்த வரை ஆயுத தளபாடங்களை தளப்பிராந்தியத்துள் கொண்டு வந்து சேர்ப்பதென்பது, நெருக்கடிகள் நிறைந்ததொரு பணியாகும். தாமதங்களையும், இழப்புக்களையும், இடையூறுகளையும் பெருமளவில் எதிர் கொள்ள வேண்டும்.

இவ் அடிப்படையில் போர் முனையில் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படும் வளங்கள் பன்மடங்கு பெறுமதி மிக்கனவாகும்.

**பிரேம்**

இத்தாக்குதல்கள் இன்னொரு விடயத்தையும் உணர்த்தி நிற்கின்றன. அதாவது மிகப் பெருமளவிற்கு படைபலத்தைப் பிரயோகித்து எதிரி முன்னேறிய பகுதிகளுக்குள்ளேயே அவனுக்கு பாதுகாப்பில்லை என்ற நிலையாகும். படகு கைப்பற்றப்பட்ட சம்பவம் சிங்களப் படைகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தன. அரசும், சிங்களப் பத்திரிகைகளும் திகைத்து நிற்கின்றன.

கடந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் லெப். ஜெனரல் கொப்பேகடுவவும் உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்ட சம்பவத்தினை அது தீவகப் பகுதி மீட்கப்பட முன்னர் புதைக்கப்பட்ட கண்ணிவெடி எனவும் தற்செயலாகவே அதில் வாகனம் சிக்கியது எனவும் மிக மிகச் சிரமப்பட்டே அவர்கள் சிங்கள மக்களை நம்ப வைத்தார்கள். விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் புலிகள் ஊடுருவுவது சாத்தியமற்றது என வரிந்து கட்டிக் கொண்டு வாதிட்டார்கள். சிங்கள மக்கள் நம்ப வைக்கப்பட்டார்கள் நம்பினார்கள்.

ஆனால் இரு வாரங்கள் கழிவதற்குள்ளாகவே சிங்களப்பத்திரிகைகளினாலும், இராணுவம், மற்றும், அரசினதும் வாதங்களை புலிகள் உடைத்தெறிந்தது மட்டுமல்ல - 48 அடி நீளமான நீருந்து விசைப்படகொன்றையும் கைப்பற்றிக் கொண்டு வந்தார்கள்.

அதே சமயம் இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவ் ஆண்டு பங்குனி மாதம் மணலாற்றில் 'கஜபகர' என்ற இராணுவ நடவடிக்கையைப் படைகள் மேற் கொண்டிருந்தன.

வரிந்த தாக்குதல் ஒன்றின் போது முதற்தடவையாக இராணுவத்திடம் இருந்து கனரக ஆயுதம் ஒன்றை (106 மி.மீ பின்னுதைப்பற்ற பீரங்கி) புலிகள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இச்சம்பவத்தில் தம்மிடம் இருந்து இவ் ஆயுதம் கைப்பற்றப்பட்டதை விட இராணுவத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது வேறு ஒரு விடயமாகும்.

அதாவது கனரக ஆயுதங்கள் மிகுந்த பாதுகாப்புடன் கொண்டுவரப்படுபவை, முன்னணியில் இருந்து ஏறத்தாழ 750 மீ தொடக்கம் 1000 மீற் வரையிலான தூரத்தில் கொண்டு வரப்படுபவை கட்டளை மையமும் தகவல் தொடர்பு மையமும் இவ்வாறே இப்படை நகர்வின் உயிர் நிலையமே இது தான்.

அதாவது, திருவிழா ஒன்றில் வீதி உலா வரும் நிகழ்வில் மூர்த்தியின் நிலை எத்தகையதோ - அத்தகையதொரு நிலைக்கு படை நகர்வின் போதான இந்த உயிர் நிலையை ஒப்பிடலாம்.

மணலாற்றின் இந்த இழப்பு எதிர் காலத்தில் படை நகர்வுகளின் போது கனரக ஆயுதங்களும், கட்டளை மையமும் எதிர் நோக்கவுள்ள ஆபத்தை இராணுவத்திற்கு உணர்த்தி நின்றது இதுவே அவர்களை மிகமிக அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

முடிவாக, எத்தனை பெரும் படையெடுப்பை மேற்கொண்டு நிலப்பரப்புகளைப் படையினர் கையகப்படுத்திக் கொண்டாலும் அங்கெல்லாம் அவர்களின் இருப்பு சாத்தியமற்றதாகி வருகின்றது நிலப்பரப்புகளை படையினர் கையகப்படுத்தலாம் ஆனால் புலிகளுக்கு இது அவர்களின் சொந்தநிலம் அவர்கள்பிறந்து வளர்ந்தமண் இதன் ஒவ்வொரு மூலையும் அவர்களுக்குப் பரிச்சயமானவை இந்த மண் இறுதி வரை அவர்களைப் பாதுகாக்கும்.

ஆனால் இராணுவத்தைப் பொறுத்தவரை, இம் மண்ணின் ஒவ்வொரு சதுர அங்குல நிலமும் அவர்களுக்குபரிச்சயமற்றவை அது தன் முழு வீச்சுடன் அவர்களைஎதிர்த்து நிற்கும் அழிக்கும்.

## அமெரிக்க ஆதிக்க மமதையை அ. சே. இயக்கம் கண்டிக்க வேண்டும்

### மலேசிய வெளியுறவு அமைச்சர்

(ஜகார்த்தா)

ஈராக்கிய தென் பகுதியில் விமானங்களை பறக்கவிடாது தடை உத்தரவு விதிக்கும் அமெரிக்காவின் ஆதிக்க மமதைக்கு அணிசேரா இயக்கம் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென மலேசியா கேட்டுள்ளது.

ஜகார்த்தாவில் அணிசேரா மாநாட்டு கூட்டத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் ஆரம்ப கூட்டத்தில் பேசிய மலேசிய வெளி விவகார அமைச்சர் அப்துல்லாஹ் அஹ்மத் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

ஈராக்கில் விமானத் தடை பிராந்தியம் அமைப்பது சர்வதேச நியதிக்கும் நடைமுறைக்கும் முற்றாக முரணான செயலாகும் என்றும், தெரிவித்தார்.

அமெரிக்கா வெளியிட்ட விமானத்தடை உத்தரவும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள விசாரணைக்குத் தேவைப்படும் சந்தேக நபர்கள் பிற நாட்டில் காணப்பட்டால் அவர்களைப் பிடிப்பதற்கு உயர்நீதிமன்றம் பிறப்பித்த கட்டளையும் அமெரிக்க ஆதிக்க மமதையைத் தெளிவாகக் காட்டுகிறதென அவர் தெரிவித்தார்.

ஆறுநாட்களுக்குத்தொடரும் 106 அங்கத்தவர்களைக் கொண்ட அணிசேரா இயக்கத்தின் உச்சி மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் மலேசிய வெளிவிவகார அமைச்சர் குரல் எழுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிரிய வெளிவிவகார அமைச்சர் பாருக் அல்வுரா கருத்துத் தெரிவிக்கையில் ஐ.நா பாதுகாப்புச்சபை தீர்மானங்களை சிரியா ஏற்று நடக்கும் அதே வேளையில் ஈராக்கின் ஒருமைப்பாட்டிற்கும் ஆதிபத்தியத்திற்கும் உதவியாக இருப்போமென அறிவித்தார்.

## அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வளர்ந்துவரும் உலக அறிவியல் துறைக்கு தமிழீழ மாணவர்களும் ஈடுகொடுக்கும் வகையிலும் அறிவியல் சார்ந்த ஒரு உலகப்பார்வை கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்கும் நோக்குடனும் தமிழீழ மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் மேற்படி கருத்தரங்குத் தொடரை ஏற்பாடு செய்துள்ளது

இன்று பிற்பகல் 3.30 மணியளவில் முதலாவது கருத்தரங்கு கொக்குவிலில் அமைந்துள்ள மாணவர் இயக்க நடுவகப் பணியகத்தில் ஆரம்பமாக உள்ளது. மேற்படி கருத்தரங்கில் அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டு பயனடையுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க நடுவகப் பணியகம் கேட்டுள்ளது.

### அதிபர்களுக்கான கூட்டம்

பண்டத்தரிப்புக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்று எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல்10.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி ''சாரி'' மண்டபத்தில் நடைபெற உள்ளது இக் கூட்டத்திற்கு சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## ஜனாதிபதி

ஏனைய இருநீதிபதிகளும்தான் அநேகமாகக் கொயிகமவினராக இருத்தல் கூடும். தீர்ப்பில் கொயிகம உணர்வுகள் செல்வாக்குச் செலுத்தாமலிருப்பதை உறுதிப்படுத்தியதாலேயே ஜனாதிபதி வெற்றிக்கான வாய்ப்புக்களையும் உறுதிப்படுத்தி விட்டாரா?

நீதிபதிகள் நேரடியாக அச்சுறுத்தப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை. ஆனால், கொழும்பில் ஒவ்வொரு சிங்களவரிடமும் அச்சமும் சந்தேகங்களும் உண்டு. இதில் நீதிபதிகளும் விதிவிலக்கல்ல. இப்பொழுது கொழும்பில் கறுப்புப் பூனைகளை விலக்கிச் சிந்திப்பது என்பது ஆபத்தான ஒரு கற்பனைதான்.

பிரேமதாஸாவின் முன்னோடிகள், அல்லது அவரையொத்த ஆடசியாளர்கள் என்று கூறப்படும் பிலிப்பைன்சின் மார்கோஸ், பாகிஸ்தானின் ஷியா உல், பங்களாதேஷின் எர்சாட் போன்ற மூன்றாம் உலக நாடுகளின் நோயுற்ற ஜனநாயகத்தின் தலைவர்களின் வரிசையில் பிரேமதாஸாவும் ஒருநாள் விழப்போகிறார் என்பதே கொயிகமவினரின் நம்பிக்கையாக இருக்கிறது. மேற்சொன்ன மூன்று தலைவர்களும் தேர்தல் வழி முறைகளின் மூலமே தமது சர்வாதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டார்கள். எதிர்க்கட்சிகள் கலந்துகொள்ளாத தேர்தல்களை நடத்துவது. அல்லது கொந்தளிப்பான நாட்களில் தேர்தல்களை நடாத்துவது இவர்களுடைய பாணி. இதன்படி எதிர்க்கட்சியினருக்கு ஆதரவான இடங்களில் குழப்பத்தை உருவாக்கி அங்கு வாக்காளர்களின் வருகையை இயலுமானவரை தடுக்கும் அதே சமயம் தமக்கு ஆதரவான பகுதிகளில் இராணுவ வேலியை அமைத்து அதிகபட்ச வாக்களிப்பை உறுதி செய்வது. பிரேமதாஸவிற்கெதிரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குற்றச்சாட்டுக்களில் இது பிரதானமானது. ஆனால் கொயிகமவினர் கூறுவதுபோல பிரேமதாஸவிடமிருந்துதான் இலங்கைத் தீவின் ஜனநாயகம் நோயுறத் தொடங்கியது என்பதல்ல. பல தசாப்தங்களுக்கு முன்பே, தமிழர்களுக்குத் துரோகமிழைக்கும் அரசியலுக்கு கொயிகமவினர் தயாராகிய போதே இலங்கைத் தீவின் ஜனநாயகம் நோய் கண்டுவிட்டது இன்று பிரேமதாஸ அறுவடை செய்வதெல்லாம் முன்பு ஏற்கனவே அதிகாரத்திலிருந்த கொயிகமவினர் விதைத்தவற்றின் கனிகளைத்தான்.

சிங்கள ஆட்சிப் பாரம்பரியத்திற்குச் சவாலாகப் பிரேமதாஸ இருக்கிறார் என்பதே முக்கிய பிரச்சினை. வலியதும் தொடர்ச்சியுமுள்ளதுமான ஆட்சிப் பாரம் பரியம் ஒன்றைப் பிரேமதாஸ தனியனாக எதிர்த்துக் கொண்டிருக்கிறார். அவர் அயர்ந்துவிடக்கூடிய தருணத்தில் அவரை முற்றுகையிடுவதற்காகக் கொயிகமவினர் சதா தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவரோ வன்முறையில் ருசி கண்ட, வன்முறைக்குக்கூசாத ஒரு அரசியலிற்குத் தொடர்ந்தும் தலைமை தாங்கக் கூடியவராகக் காணப்படுகிறார்.

## தியாகி திலீபன் நினைவு தட கள விழா - 1992

இதுவரை நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளின்படி வட்டப்பிரிவுகளின் பதக்கப் பட்டியல்

| வட்டப்பிரிவு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சண்டிலிப்பாய் | 06 | 03 | 03 |
| தெல்லிப்பழை | 02 | 02 | 01 |
| யாழ்ப்பாணம் | 01 | 01 | 02 |
| உடுவில் | 01 | 01 | — |
| நல்லூர் | — | 02 | 01 |
| பருத்தித்துறை | — | 01 | — |
| பளை | — | — | 01 |
| கோப்பாய் | — | — | 01 |

நேற்று மாலை ஆரம்பமாகிய தியாகி திலீபன் நினைவு தட கள விழாவில் 2 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

பெண்களுக்கான 800 மீற். நிகழ்ச்சியில் சண்டிலிப்பாய் வட்டப்பிரதேசத்தைச் சேர்ந்த செல்வி த.சுஜித்தா 2 நிமி. 41.84 செக்கன்களில் கடந்து தனது முன்னைய சாதனையை முறியடித்தார்.

இதே வட்டப் பிரதேசத்தைச் சேர்ந்த செல்வி து. ரேனுகா 10000 மீற். தூரத்தை 45நிமி. 13.49 செக்கன்களில் கடந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இன்றைய போட்டிகள் பி.ப. 2.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அச்சகமொன்றிற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

1) இயந்திர இயக்குனர்
2) அச்சுக்கோப்பாளர்கள்
3) அச்சக முகாமையாளர்
4) கணக்குப் பதிவாளர்
5) ஒப்புநோக்குநர்

மூன்று வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி,

தமிழீழ மீட்பு நிதி தொடர்பகம்
பலாலி வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

(3130)


## ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 25-08-1976

தாயக மடியில் 16-09-1991

### வீரவேங்கை கல்கத்
(மார்க்கண்டு மதனரூபன்)
திதி 04-09-1992

வேங்கை கூட்டமதில் நீயும் ஒருவனாக
எதிரி புறமோட வைத்தாய்
உன் சின்ன உடல் சரிந்தது
மணலாற்றுத் தாய் மண் — உன்னை
அள்ளி அணைத்த நாள்
இன்று ஓராண்டாகிறது
இந் நினைவு நாளில் மரணித்த
அனைத்து மாவீரர்களின்
ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

மு.கு. எமது இல்லத்தில் நடைபெறும் திதியில் போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
புத்தூர் கிழக்கு, புத்தூர். குடும்பத்தினர்

(3129)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை இதயா
(தம்பிராசா தேவறஞ்சினி)

வீரஜனனம் 14.05.1975

வீரச்சாவு 16.09.1991

திதி: 04.09.1992 (இன்று)

சாதனை படைத்து
நெஞ்சங்களில் நிறைந்து
ஓராண்டு செல்கிறது
இதயங்கள் சிலிர்க்கிறது
காலம் ஒன்று கைகூடும்
உன் கனவுகள் என்றும் நிறைவேறும்!

16-09-1991 அன்று மணலாற்றில் இதயாவுடன் வீரச்சாவெய்திய ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

நாகேந்திரபுரம், புளியம்பொக்கணை.
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.
(3098)

## 'சாளரம்' இன்று வெளி வருகிறது

'சாளரம்' செப்ரெம்பர் மாத இதழ் முதலாம் ஆண்டு சிறப்பிதழாக இ வெளின்று வருகிறது.

பாலகுமாரின் ''நோய்ப் படுக்கைகளால் எமது புவிக் கோளம். பூமி - எதிர்காலத் தலைமுறைக்கு சாப்பொறி'', மணலாறு விஜயனின் ''கண்ணில் தெரியும் கதைகள்'', ''பவளவிழாக் கண்ட ஆர்தர் சி. கிளாக்'' ''மன ஊனமற்ற மனிதர்'' (பேட்டி) ஆகிய ஆக்கங்களுடன் பல்வேறுஅம்சங்களையும்கொண்டு இந்த இதழ் இன்று வெளிவருகின்றது.

### நிவாரணத்தை

குறைக்குமாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தாரெனத் தெரிவித்ததாக நேற்றிரவு ரூபவாகினி குறிப்பிட்டது எனினும் இம்முறை நிவாரணப் பொருள்கள் விநியோகம் குறைக்கப்பட்டதற்கு இது ஒரு காரணமல்ல எனவும் சில்வா மேலும் தெரிவித்தார்

### வீரச்சாவு

வேலையாகச் சென்று திரும்புகையில் பிருமா வெளிக்கட்டு எனும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை சத்தியராஜ் (ஜெயம் - கதிர்காமதம்பு, மனோகர் ஆலையடி வீதி, தம்பிலுவில்) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத தெரிவித்துக் கொள்கின்றனர்.

### சிறிலங்கா

நிதியைக் கொண்டுயுத்தத்தை நடாத்தி வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் 800 மில்லியன் உதவிவழங்க உறுதியளித்தன. ஆனால் அப்போது அவை யுத்தத்திற்கு முடிவு கட்டப்படும் என நம்பியிருந்தன.

அப்படி ஒரு தீர்வு கண்ணுக்குத் தெரியவில்லை ஆனால் இப்பொழுது தென்படுவது உணவு வெட்டுதான் என பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

### வாணிபம்

கள், மின்கருவிகள், மோட்டார் உதிரிப்பாகங்கள் வாணிபம் என்பவற்றில் ஈடுபட்டுள்ளோர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக பின்வரும் திகதிகளில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு இம்மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரையும். பருத்தித்துறை உ. அ. அ. பிரிவு இம்மாதம் பதினைந்தாம் திசதி தொடக்கம் பதினெட்டாம் திகதி வரையும் சாவகச்சேரி உ. அ. அ. பிரிவு இம்மாதம் இருபத்திமூன்றாம் திகதி தொடக்கம் இருபத்தேழாம் திகதி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏனைய உ. அ. அ. பிரிவு தொடர்பான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

### பாடுபட்டு

(வயது 80), வைரவப்பிள்ளை (வயது 75) ஆகியோர் உட்பட மேலும் இருவர் தெய்வாதீனமாக தப்பிவந்துள்ளவர்களாவர். இவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படவில்லை. குடிநீர் எடுப்பதற்குக்கூட வெளியே செல்லமுடியாதநிலை இருந்ததாகவும் இவர்கள் கூறினர். தாம் தப்பிவரும் பொழுது கண்டவற்றை மட்டுமே இவர்கள் தெரிவித்தனர் இவற்றை விட மேலும் பல அழிவு வேலைகள் நடைபெற்று வருவதாக தாம் நம்புவதாக கூறினார்கள். (க)

## இடமாற்றங்கள்
(கொழும்பு)

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, பிரதேச செயலங்களுக்கான இடமாற்ற வேலைகளை இந்த மாதம் 15 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்து கொள்ளுமாறு சகல அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் கேட்டுள்ளன.

### அரச

கப்பட்டது. அரசு இனிமேல் இதே தொகையை இரு வாரங்களுக்கு வழங்கும் என்றும், இதன் மூலம் நிவாரணம் சரி அரைவாசியாகக் குறைக்கப்படுகிறது என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியாவிலிருந்து 24018 அகதிகள் இதுவரை இலங்கை திரும்பியுள்ளனர். மேலும் ஒரு தொகுதி அகதிகள் எட்டாம் திகதி இலங்கை திரும்பவுள்ளனர். இவர்களைத் தவிர யாழ்குடாநாட்டில் மட்டும் 53773 குடும்பங்கள் அகதிகளாக இருப்பதாக மேலும் அவர் தெரிவித்தார்

ஆயினும் அண்மையில் வலி தென்மேற்கு, வலி வடக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த சுமார் 16 ஆயிரம் குடும்பங்கள் இதில் அடங்காது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேவை 400

அனுப்பி வைக்கப்பட்டுவருவது வழக்கமாகிவிட்டது இதனால் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியவில்லை இவ்விடயம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டு நீண்ட நாட்களாகிவிட்டது

நேற்று திடீரென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து ஒரு விசித்திரமான வானொலிச் செய்தி ஒன்று யாழ் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்தது. இச்செய்தி பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு வியப்பைக் கொடுத்தது. ''உங்களுக்கு காகிதாதிகள் பற்றாக்குறை இருப்பதாக தெரியவருகிறது உங்களுக்கு எந்த தரத்திலான காகிதாதிகள் தேவையென்று எமக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும் நாம் அவற்றை அனுப்பி வைக்கிறோம். ஆனால் அவற்றின் நிறை ஐந்து கிலோகிராமிற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்'' என்று தெளிவாக கூறப்பட்டிருந்தது.

மேற்படி நடவடிக்கை யாழ். பல்கலைக்கழகத்தையும் தம்மையும் அவமானப்படுத்துவதுபோல் உள்ளதாக பல்கலைக்கழக அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர். (க), (ச)

## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

தகைமைகள்:- 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த (உயர்தரம்) வரை.
உயரம்:- 5' 6''
வயது:- 18 — 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 10 - 09 - 92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேராக சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

[5002]

## வீரச்சாவு

### வீரவேங்கை விழி
(சங்கரப்பிள்ளை நிமலேஸ்வரி)

ஏழாலையில் பிறந்து 'யாதும் எம்மூர்' என்ற தமிழீழப் பற்றினால் கைதடியில் வந்து பல சேவைகள் புரிந்த

"வீரவேங்கை விழி"

நேற்று மாலை கைதடி வடக்கு நவபுரத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் வீரமரணத்தை தழுவிக் கொண்டார்.

இவருக்கு எமது அஞ்சலிகள்

கைதடி
நவபுரம் வாழ் மக்கள்

(3131)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 03-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5473

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

26-5962, 24-6855, 26-4657, 28-1085, 42-2364, 26-423. 28-9927, 27-7419. 40-4429.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

42-3726, 24-7225, 40-7541, 27-3910, 27-9033. 24-6475, 24-9938, 26-2785, 27-5187, 41-8443, 42-0970, 41-8467, 26-7525. 28-6853, 24-4481.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.